# தமிழரசு

1.11.1994 ரூ.3






பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்
அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்
DIPR No.678/DIS/93/247
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்.....


8-வது உலகத் தமிழ் மாநாடு:
வரவேற்புக் குழுக் கூட்டத்தில்
மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை ........ 2

8-வது உலகத் தமிழ் மாநாடு:
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்
திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள்
விளக்கவுரை ........ 5

8-வது உலகத் தமிழ் மாநாடு:
தஞ்சை தயாராகிறது! ........ 9

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
சிலைத் திறப்பு விழாவில்
மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை ........ 14

முத்தையா செட்டியார் சிலைத் திறப்பு விழாவில்
மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை ........ 19

தமிழ்நாட்டில் புயல் மழை:
மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை ........ 23

காவல் துறைத் தலைமை அலுவலகக்
கட்டடக் கால்கோள் விழாவில்
மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை ........ 24

தமிழ் பயிற்று மொழியாக வேண்டும்!
-தவத்திரு குன்றக்குடி அடிகளார் ........ 29

மாணவர் பக்கம் ........ 31

சேக்கிழார்
-டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் ........ 33

சூரிய வெப்ப ஆற்றல் தொழில் நுட்பம் ........ 38

கண்கள் பாதுகாப்பு ........ 41

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்போம்! ........ 43

கணியான் கூத்து ........ 45

நூல் நயம் ........ 48


**'தமிழரசு'**

வெள்ளி விழா ஆண்டு



## இதழ்தோறும் ஓர் இனிய குறள்

*பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவன் அடிசேரா தார் (10)*

★ இறைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர், பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும்; மற்றவர் கடக்க முடியாது.


**தமிழரசு**

திருவள்ளுவராண்டு. 2025

ஐப்பசித் திங்கள்: 16

மலர்: 25 இதழ்: 9

1.11.1994

விலை: ரூ.3

# தமிழ்மொழி புத்துணர்ச்சி பெற வேண்டும்!



## எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் வரவேற்புக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை

**1995**-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதி முதல் 5-ஆம் தேதி வரை நடைபெற உள்ள எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கான ஏற்பாடுகள் குறித்து விவாதிப்பதற்காக இந்தக் கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அனைவரையும் வரவேற்கிறேன்.

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி"

தமிழ்ப் பெருங்குடி என்பார்கள். அத்தகைய தொன்மையுடைய தமிழ் மொழி, இன்று காலத்தைக் கடந்து நின்று, காலத்தால் வெல்ல முடியாத அளவிற்கு, உலக அரங்கில், தனிப் புகழ் பெற்று, சிறப்புடன் விளங்கிக் கொண்டிருக்கிறது.

செந்தமிழின் வளர்ச்சிக்காகவும், தமிழ் கூறும் நல்லுலகத்தின் மேன்மைக்காகவும், தேமதுரத் தமிழோசையை உலகெலாம் பரப்ப வகை செய்வதற்கும், நாம் மேற்கொண்டு இருக்கும், முக்கியமான முயற்சி தான், இந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாடு.

நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும், காவிரி பாயும் தஞ்சைத் தரணியில், இந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை, அகில உலக முழுவதும் வாழும் தமிழ் மக்கள், மகிழ்ச்சி கொள்ளும் வண்ணம், சீரோடும் சிறப்போடும், நடத்த வேண்டும் என்பதே, எனது அவா. தமிழ்த் தாய்க்கு ஆராதனை செய்வதற்கு, நாம் மேற்கொள்ளும் முயற்சி, சிறப்பாக நடைபெறும் என்று, பரிபூரணமாக நம்புகிறேன்.

விஞ்ஞானமும், தொழில் நுட்பமும், அசுர கதியில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. 21-ஆம் நூற்றாண்டை நோக்கி, நடைபோட்டுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஈடு கொடுத்து, தமிழ் மொழியை மேலும் வளப்படுத்தவும், வலுப்படுத்தவும், நாம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு, இந்த உலகத் தமிழ் மாநாடு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுக்கும் என்று நம்புகிறேன்.

கடந்த கால அனுபவங்களின் அடிப்படையிலும், நிகழ் காலத்தின் நடப்புகளைக் கருத்தில் கொண்டும், எதிர்காலத்தின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப, தமிழ் மொழியை, எந்த அளவிற்குச் சிறப்புடைய, ஒரு மொழியாக்க வேண்டும் என்பதைப் பற்றியும், நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். தமிழ் மொழி, இந்த மாநாட்டின் மூலம், ஒரு புத்துணர்ச்சி பெற வேண்டும் என்பதே எனது அவா.

தமிழ் மொழியின் பெருமையைக், கட்டிக் காக்கின்ற ஒரு மாபெரும் பாரம்பரியத்தின், ஒரு முக்கியமான கால கட்டத்தில், இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனவே, எட்டாவது உலகத் தமிழ் மாநாடு, இது வரையில் நடைபெற்ற, மற்ற தமிழ் மாநாடுகளைவிட, மிகச் சிறப்பாக நடைபெற

# எட்டாவது உலகத் தமிழ் மாநாடு 1995 தஞ்சாவூர்

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில்

# மாநாட்டு வரவேற்புக் குழுக் கூட்டம்





# கலைகளைக் கட்டிக் காப்போம்

நடனக் கலை தமிழ்நாட்டின் பழங்கலைகளில் ஒன்றாகும். சங்க காலம் முதற் கொண்டு, தமிழர்களின் வாழ்க்கையில் நடனம் அல்லது கூத்து, மக்களின் உள்ளங்களிலே ஆன்மீக வேட்கையை உருவாக்குவதற்குப் பயன்பட்டுள்ளது. நமது தொல்காப்பியம், ஆடலுக்கு இலக்கணம் கூறும் நூல். சிலப்பதிகாரம், பயிற்றுவிக்கப்பட வேண்டிய நடனக் கலையின் இலக்கணத்தையும், நுட்பத்தையும், பெருமையையும், விளக்குகிற காவியம். சுருக்கமாகச் சொன்னால், பல்லவ, சோழ, சேர, பாண்டிய மன்னர்கள் காலத்தில், நடனக் கலை மன்னர்களால் போற்றப்பட்டு, மக்களால் வரவேற்கப்பட்டு, அன்றாட வாழ்க்கையின் இன்றியமையாத ஒரு அம்சமாகக் கருதப்பட்டது. இன்றும் தமிழக நடனக் கலைகளில், தலைசிறந்த படைப்பாகப் பரத நாட்டியம் விளங்குகிறது.

“அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்” என்று, இறைவனையே பரதக் கலையின் கண்கண்ட வடிவமாக, தமிழ் மக்கள் கருதுகின்றனர். இறைவனுடைய நடனமே உலகத்தின் ஆதாரமென, நம்முடைய பழம் பெரும் இலக்கியங்கள் போற்றுகின்றன. பல்வேறு மனித உணர்வுகளின் பிரதிபலிப்பாகவும் பரதம் திகழ்கின்றது.

அன்றுபோல் இன்றும், பரதக் கலை, ஆடுவோர் உள்ளத்தில் இறையுணர்வு நிரம்பி நிற்கும் வகையிலும், காண்போர் உள்ளத்தில் உயர்ந்த இன்பம், ஆழ்ந்த அமைதி போன்றவற்றை உருவாக்கும் வகையிலும், எப்பொழுதும் மக்கள் மனதை ஈர்க்கும் ஓர் ஒப்பிலாக் கலையாக இருந்து வருகின்றது.

இந்தியத் திருநாட்டின் நடனங்கள், கலைப் பொக்கிஷங்கள் மட்டுமல்ல, அவை இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டிற்குச் சான்றாகவும் விளங்குகின்றன. எனவே, இந்தக் கலைகளைக் கட்டிக்காத்து வளர்ப்பது, நமது தலையாய கடமையாகும்.

-'புரட்சித்தலைவியின் முழக்கம்' தொகுதி-1-லிருந்து

---

வேண்டும், என்ற ஆர்வத்தின் அடிப்படையில் தான், இந்தக் கூட்டத்தை நான் இன்று கூட்டியுள்ளேன்.

உலகத் தமிழ் மாநாட்டின், பல்வேறு பணிகளை மேற்கொள்வதற்கு, பல்வேறு குழுக்கள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. அந்தக் குழுக்கள் அனைத்தும், தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பணிகளைச், சீரிய முறையில் மேற்கொண்டு வருகின்றன. பல்வேறு குழுக்களின் மற்றும், பல்வேறு துறைகளின் ஒருங்கிணைப்பைத், திறம்பட ஏற்படுத்த வேண்டும். உலகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து, வருகின்ற தமிழறிஞர்களும், கலை வித்தகர்களும், தங்கள் வாழ்நாளில் என்றும் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சியாக, இந்த உலகத் தமிழ் மாநாட்டை, நாம் நடத்திக் காட்ட வேண்டும். பொது வாழ்வில், முக்கிய பதவிகளை வகித்த பெரியோர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், இந்த மாநாட்டைச் சீரிய முறையில் நடத்துவதற்குத், தங்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும், எடுத்துக் கூறுவார்கள் என்று நம்புகிறேன்.

மாநாடு தொடர்பான பல்வேறு பணிகளைக், கவனிப்பதற்காக அமைக்கப்பட்ட குழுக்கள், இதுவரை செய்து முடித்தப் பணிகளையும், எஞ்சியுள்ள பணிகள், எப்போது செய்து முடிக்க இயலும் என்பதைப் பற்றியும், விளக்கமாக எடுத்துரைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கூட்டத்தில் விவாதிப்பதற்காக, எடுத்துக் கொள்ளப்பட்ட பொருள்கள் மீது, கருத்துக்களைத் தெரிவிப்பதுடன், இந்த மாநாட்டை மேலும் சிறப்பாக நடத்துவதற்கான, உங்கள் ஆலோசனைகளையும், கருத்துக்களையும், தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவற்றைச் செயல்படுத்த நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, உங்களது ஆலோசனைகளையும், கருத்துக்களையும் வரவேற்கின்றேன். நன்றி. வணக்கம்.

# 8வது உலகத் தமிழ் மாநாடு

## உலகம் முழுவதிலிருந்தும் தமிழ் அறிஞர்கள் வருகை

### தஞ்சை ஏற்பாடுகள் குறித்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் விளக்கவுரை

தஞ்சையில் நடைபெற இருக்கும் உலகத் தமிழ் மாநாடு பற்றிய சிறப்பு அம்சங்களை- 21.10.94 அன்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் விரிவாக விளக்கிக் கூறினார். இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறியதாவது:

**செய்தியாளர்கள் கூட்டம்**

1995-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ஆம் தேதி முதல் 5-ஆம் தேதி வரை தஞ்சாவூரில் 8-வது உலகத் தமிழ் மாநாட்டைத் தமிழ்நாடு அரசு நடத்துகிறது.

இந்த மாநாட்டுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரம்மாண்டமான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

மாநாட்டையொட்டி, தொடக்க நாளன்று மிகவும் கோலாகலமாக ஊர்வலம் நடக்கிறது. மாநாட்டின் போது தஞ்சாவூரில் தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்பு, தமிழர் பண்பாடு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் அரசுத் துறைகள், நிறுவனங்கள் பங்கு பெறும் கண்காட்சி நடத்தப்படும்.

தமிழகத்தை ஆண்ட சோழ மன்னர்களின் வீர வரலாற்றைச் சித்திரிக்கும் ஒலி-ஒளிக்காட்சியை வெளிநாட்டவர்களும் கண்டு பிரமிக்கும் வகையில் சிறப்பாகத் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**அஞ்சல் தலை, நாணயம்**

இந்த மாநாட்டின் போது- இராஜ ராஜ சோழன் உருவம் பொறித்த நினைவு அஞ்சல் தலை, திருவள்ளுவர் நாணயம் ஆகியவற்றைத் தொடக்க விழாவின் போது வெளியிட வேண்டும் என்று தமிழக அரசு மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது.

மாநாட்டின் போது, பொது மக்களுக்கு 300 கிராம் அளவிலான இரு வகை உணவுப் பொட்டலங்கள் "ஒரு பொட்டலம் ஒரு ரூபாய்" என்ற பெயரளவு விலையில் ஆங்காங்கே விற்பனைக் கூடங்கள் மூலம் விநியோகிக்கப்படும். அத்துடன் குடிநீர்ப் பொட்டலங்களும் இலவசமாக வழங்கப்படும்.

இது தவிர, தனியார் ஓட்டல்களிலும் தரமான பொது உணவு தயாரித்து நியாயமான விலையில் உணவுப் பொட்டலங்களாக விற்பனை செய்ய ஓட்டல் உரிமையாளர்களுடன் கலந்து பேசி நடவடிக்கை எடுக்கப்படும்.

**நிறைவு விழா**

நிறைவு விழாவில் மிகப் பிரம்மாண்டமான அளவில் கலை நிகழ்ச்சிகள், வீர விளையாட்டுகள், சாகசங்கள், மாணவ, மாணவியரின் ஆடல், பாடல் அணி வகுப்புகள் நடக்கின்றன.

மாநாட்டுக்கு வரும் பொது மக்களின் வசதிக்காகக் கூடுதல் பஸ் வசதிகளும், பகலில் இளைப்பாறவும் இரவில் தங்கிச் செல்லவும் பெரிய பந்தல்களும் அருகில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதிகளும் அமைக்கப்படும்.

**ரெயில்கள்**

தஞ்சை ரெயில் நிலையத்தைப் புதுப்பிக்கவும், கம்ப்யூட்டர் மூலம் முன்பதிவு வசதி, கூடுதல் ரெயில்கள், குளிர்பதனப் பெட்டிகள் இணைப்பு ஆகிய ஏற்பாடுகளைச் செய்து தரவும் தென்னக ரெயில்வே ஒப்புக் கொண்டுள்ளது.

**திருவள்ளுவர் சிலை**

தஞ்சையில் இதுவரையில் செய்யப்பட்ட ஏற்பாடுகள், நிரந்தரமாகப் பலன் தரும் பணிகள், இனி மாநாட்டுக்குத் தேவையான பணிகள் வேகமாக நிறைவேற்றப்படும்.

தஞ்சாவூரில் கட்டப்படும் 7 நுழைவு வாசல்களின் பணிகள் அநேகமாக முடிந்துவிட்டன. தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் திருவள்ளுவர் சிலை வைக்கப்பட இருக்கும் மண்டபப் பணிகள் முடிந்து விட்டன.

**பிரம்மாண்டமான ஊர்வலம்**

மாநாட்டையொட்டி ஜனவரி முதல் தேதியன்று பிற்பகல் 2 மணியளவில் நாகப்பட்டினம் – பட்டுக்கோட்டை ரோடு சந்திப்பில் இருந்து ஊர்வலம் தொடங்குகிறது.

இந்த ஊர்வலம் பிரம்மாண்டமான முறையில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கியக் காட்சிகள், தமிழுக்காக அருந்தொண்டாற்றியவர்கள் குறித்த அலங்கார வண்டிகள் இந்த ஊர்வலத்தில் வரும். ஊர்வலத்தின் நடுவில் தமிழ்க் கலாச்சாரம் மற்றும் பண்பாடு குறித்த நடனங்கள், கிராமிய நடனங்கள், கிராமியப் பாடல்கள் இடம் பெறும்.

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, தமிழ் இலக்கியத்தை மையமாகக் கொண்ட ஒரு சிறிய திரைப்படம் தயாரிக்கலாம் என்று பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

### ஆலோசனை

இந்த மாநாடு சிறப்பாக அமைய வேண்டும் என்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் துரித நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். இது தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள குழுக்களை அவ்வப்போது அழைத்து தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகிறார்.

வருகிற 28-ஆம் தேதி வரவேற்புக் குழுவினரை அவர் அழைத்துப் பேசவிருக்கிறார்.

இவ்வாறு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் கூறினார். அப்போது தமிழ் கலாச்சாரத் துறைச்செயலாளர் திரு. இளங்கோ, உலகத் தமிழ் மாநாடு தனி அதிகாரி திரு. இறையன்பு ஆகியோர் உடனிருந்தனர்.

உலகத் தமிழ் மாநாடு குறித் மேலும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி சோமசுந்தரம் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

### ஆய்வரங்க நிகழ்ச்சிகள்

1995-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 5-ஆம் நாள் வரை தஞ்சையில் நடைபெறவுள்ள எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் போது,



**பெண் கல்வி நாட்டில் எந்த அளவிற்கு உயர்கின்றதோ, அந்த அளவிற்கு நாடு மேம்பாடு அடைகின்றது என்று பொருள்.**

**–பேரறிஞர் அண்ணா**

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத் தலைவர் பேராசிரியர் நொபோரு கரஷிமா தலைமையிலான ஆய்வரங்கக் குழு பொறுப்பில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சிறப்பு நிலைக் கருத்தரங்குகள் நடைபெறவிருக்கின்றன. இக்கருத்தரங்குகளில் கலந்துகொள்ள உலகமெங்கிலும் உள்ள 2500 தமிழியல் பேராசிரியர்களுக்கு மாநாட்டின் முதல் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளன. தமிழியலில் கீழ்க்காணும் தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் கருத்தரங்கத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன.

1. பண்டைய இலக்கியம், 2. பண்டைய இடைக்கால இலக்கியம், 3. பிற்கால இடைக்கால இலக்கியம், 4. தற்கால இலக்கியம், 5. ஒப்பிலக்கியம், 6. குழந்தை இலக்கியம், 7. இலக்கிய நடையியல், 8. இலக்கியத் திறனாய்வு, 9. தத்துவமும் சமயமும், 10. இலக்கணம், 11. மொழியியல், 12. மொழி கற்பித்தல், 13. அகராதியியல், 15. சுவடியியல், 16. ஆட்சித் தமிழ், 17. அறிவியல் தமிழ், 18. நாட்டுப்புறவியல், 19. வரலாறு, 20. சமூக வரலாறு, 21. வரலாற்றியல், 22. கல்வெட்டியல், 23. தொல்லியல், 24. பண்பாட்டு மாந்தவியல், 25. சமூகவியல், 26. தமிழர் குடிபெயர்வு, 27. பன்னாட்டு உறவு, 28. அயல்நாடுகளில் தமிழரும், தமிழும், 29. உளவியல், 30. கல்வியியல், 31. தகவல் தொடர்பியல், 32. பண்பாட்டியல், 33. பொருளியல், 34. ஆடலும் இசையும், 35. நாடகமும் திரைப் படமும், 36. ஓவியம், 37. சிற்பம், 38. அரங்கக் கலைகள், 39, தொல்லறிவியல், 40. அறிவியலும், தொழில் நுட்பமும், 41. மருத்துவம், 42. சித்த மருத்துவம் ஆகியவையாகும்.

இதுவரை 700 அறிஞர்கள் இக் கருத்தரங்கில் கலந்துகொள்ளப் பதிவு செய்துள்ளனர். இவர்களுள் 23 அயல்நாடுகளைச் சேர்ந்த 250 பேராசிரியர்கள் அடங்குவர். இவர்களைத் தவிர, அமெரிக்கா, இங்கிலாந்து, பின்லாந்து, இஸ்ரேல், ஜப்பான், சுவீடன், மொரிஷியஸ், சிங்கப்பூர், மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளில் 25 அறிஞர்கள் சிறப்பு அழைப்பாளர்களாகத் தமிழக அரசால் அழைக்கப் பெற்றுள்ளனர். இவர்களில் 2 பேர் மட்டுமே உடல்நலக் குறைவால் வர இயலாமையினைத் தெரிவித்துள்ளனர். அரசு அழைப்பின் பேரில் இம் மாநாட்டிற்கு வரும் இவ்வறிஞர்கள் அரசு விருந்தினர்களாகக் கருதப்படுவதால் அவர்தம் நாட்டிலிருந்து தஞ்சை வந்து செல்வதற்கான போக்குவரத்துச் செலவுகளை அரசே ஏற்கும்.

இம்மாநாட்டின் ஆய்வரங்க நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள விழையும் அறிஞர்களிடமிருந்து இதுவரை பெறப்பட்டுள்ள 650 ஆய்வுக் கட்டுரை சுருக்கக் குறிப்புகள் 26.8.94 மற்றும் 27.8.94 ஆகிய இரு நாட்களில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற வேறு பல் கலைக் கழகங்களைச் சார்ந்த 36 அறிஞர்களிடமிருந்து வல்லுநர் குழுக் கூட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு ஆய்வரங்கத்தில் வாசிப்பதற்குத் தகுதியுடையதான 447 ஆய்வுக் கட்டுரைச் சுருக்கங்களும் தகுதியற்றவை என 203 ஆய்வுக் கட்டுரைச் சுருக்கங்களும் வகைப் படுத்தப் பெற்றன. ஆய்வரங்கத்திற்குத் தகுதியானவற்றில் அமர்வுகளின் எண்ணிக்கை ஏற்றவாறு 252 ஆய்வுக் கட்டுரைகள் வல்லுநர் குழு பிறப்பித்துள்ள வரிசையின் அடிப்படையில் செய்யப்படும்.

மாநாடு முடிவடைந்தவுடன் தமிழகத்தின் கலை பண்பாட்டுச் சிறப்புமிக்க இடங்களைக் கண்டு களிக்கும் வகையில் 150 அயல் நாட்டறிஞர்களுக்கு ஒருவார



## வள்ளுவருக்கு வாழ்த்து மாலை!

வள்ளுவப் பெருந்தகையை அவனே அறிஞன், அவனே புலவன், அவனே தமிழை அறிந்தோன் என்று தமிழ்ப் பெருமக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஏற்றிப்போற்றி வருகின்றனர். ஈடு இணையற்ற பேராசான் வள்ளுவப் பெருந்தகையை நினைக்கும்பொழுது ஆங்கில நல்லிசைப் புலவனான பென் ஜான்ஸன், ஷேக்ஸ்பியரைப் பற்றிக் கூறிய ஒரு கருத்து என் நினைவிற்கு வருகிறது – ''அவன் ஒரு யுகத்திற்கு மட்டுமல்ல, அவன் எல்லா யுகத்திற்கும் எல்லாக் காலத்திற்கும் உரியவன்''

—ப. ஜீவானந்தம்

நமது சரித்திரத்திற்கும், நாகரிகத்திற்கும் பல இலக்கியங்களிலிருந்தும் பல் காவியங்களிலிருந்தும் ஆதாரங்கள் எடுத்துக்காட்ட முடியும். ஆயினும், அவை பெரும்பாலும் பண்டிதர்களுக்குத்தான் புரியுமாகையால், பயன்படுமாகையால் திருக்குறள் ஒன்றுதான் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில், எப்படிப்பட்ட அறிவாளியும் ஏற்கும் தன்மைக்கு ஏற்ற ஆதாரமாய் அமைந்திருக்கிறது.

—தந்தை பெரியார்

குறள் நெறியுடன் வாழ்ந்த தமிழரை, சமுதாயத்தின் நச்சுப்பூச்சிகள் என்று கூறியவர் எவர்? ஏன் தமிழர் சமுதாயம் சீர்கெட்டது? இன்று மீண்டும் குறள் நெறிப்படி சாதி, சமயமற்ற சமுதாயத்தை நிறுவிட முன்வர வேண்டும் என்று நான் புலவர்களையும் மற்றோரையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

—பேரறிஞர் அண்ணா

திருக்குறள் தமிழ் மொழியில் பிறந்த ஒரு பெரும் பொதுமறை, உலகைக் கூறுபடுத்தும் பொருள்கள் அதன்கண் இல்லை. உலகை ஒருமைப்படுத்தும் செவ்விய பொருள்கள் அதன்கண் மிளிர்கின்றன. இப்பெரிய பொது மறையை மன்பதை பயின்று ஒருமை இன்பத்தை நுகர்வதாக.

—தமிழ்த்தென்றல் திரு.வி.க.

திருக்குறள் உலக நூல்களில் உயர்ந்த நூல்; தமிழர்களுக்குத் தெவிட்டாத அறிவு விருந்து. எத்தனையோ நூற்றாண்டுகள் கழிந்த பிறகும் எவ்வளவோ அரசியல், சமய, சமுதாய மாறுதல்கள் ஏற்பட்டு மாறிய பிறகும், திருவள்ளுவரின் நூல் இன்று நம்முடன் வாழ்ந்து நமக்காக அறிவுரை கூறும் சான்றோர் ஒருவரின் தெளிந்த வாய்மொழி போல் விளங்குகிறது.

—டாக்டர் மு. வரதராசனார்

---

காலச் சுற்றுலாவிற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அயல்நாட்டறிஞர்களுக்கான சிறப்புக் கலை நிகழ்ச்சிகளுக்கும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த இளங்கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையிலான கலை நிகழ்ச்சிகளுக்கும் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளுக்கும் சிறப்பான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தஞ்சாவூரில் 1995 ஜனவரி 1ஆம் தேதி முதல் 5-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் சிறப்பு மலர், அறிவியல் மலர், மாணவர் மலர் என்று மூன்று மலர்களை வெளியிட அரசு கருதியுள்ளது.

சிறப்பு மலரில் தமிழ் இலக்கியம், பேரிலக்கியம், சிற்றிலக்கியம், இலக்கணம், தமிழ் இசை, நாட்டியம், நாடகம், மொழியியல், நிகண்டு, கட்டடக்கலை, சிற்பக் கலை, ஓவியம், சமயம், தொல்லியல், கல்வெட்டியல், காசியல், மானிடவியல், சமுதாய இயல், நாட்டுப்புறக் கலை, மருத்துவம், வரலாறு, கனனியியல், தமிழ்ப் பண்பாடு, நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் பிற மொழி இலக்கியம், சிறு கதை, புதினங்களின் வளர்ச்சி, கவிதைகள் மற்றும் ஆங்கிலக் கட்டுரைகள் இடம்பெற தமிழ்நாட்டுப் பேரறிஞர்கள் 127 பேர்களிடமும் பிற மாநிலப் பேரறிஞர்கள் 21 பேர்களிடமும் அயல்நாட்டுப் பேரறிஞர்கள் 82 பேர்களிடமும் கட்டுரைகள் வேண்டப்பட்டுள்ளன.

இதுவரை பேரறிஞர்களிடமிருந்து 94 கட்டுரைகளும், 7 கவிதைகளும் வரப்பெற்றுள்ளன. தமிழ்நாட்டுப் பேரறிஞர்களிடம் இருந்து 74 கட்டுரைகளும், 7 கவிதைகளும், பிற மாநிலத்தவர்களிடமிருந்து 5 கட்டுரைகளும், அயல் நாட்டினரிடமிருந்து 15 கட்டுரைகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. இக்கட்டுரைகளில் 7 கட்டுரைகள் ஆங்கிலக் கட்டுரைகள் ஆகும்.

பல பேரறிஞர்கள் தாமே உகந்தும் கட்டுரைகள் அனுப்பி வருகின்றனர். கிடைக்கப் பெற்றுள்ள 101 கட்டுரைகளும், கவிதைகளும் ஆய்வு செய்யப்படுகின்றன. சிறப்பு மலரின் உட்குழு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவை திருத்தம் செய்யப்பட்டு, அச்சிட உரிய பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இதில் ஒரு பகுதி தஞ்சை மாவட்டத்திலுள்ள பல்வேறு சிறப்புகளை, வரலாறு, கலை, சமுதாய பாரம்பரியங்களை எடுத்துரைக்கும் வகையில் அமைக்கப்படும். மாநாட்டு மலர், மிகச் சிறந்த தாளில் பல வண்ணப் படங்களுடன், என்றும் வைத்துப் பேணும் வகையில் எழில் மலராக வெளிவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநாட்டில் அறிவியல் கட்டுரை மலர் ஒன்று வெளியிடக் கருதப்பட்டுள்ளது. அம்மலரில் மருத்துவத்துறை, வேளாண்மைத்துறை, கால்நடைத்துறை மற்றும் பொறியியல் துறை ஆகிய துறைகளின் வல்லுநர்களைக் கொண்டு, அறி

வியல் கட்டுரை வெளியிட டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் பி.பி. ராஜன் தலைமையில் உட்குழு அமைக்கப்பட்டுள்ளது.

"அறிவியலில் தமிழ் வழிக் கல்வி" என்னும் தலைப்பில் இலக்கிய இலக்கண, நயத்துடன் கட்டுரைகள் வெளியிட கால்நடைத் துறை வல்லுநர்கள் 29 பேர்களிடமும், வேளாண்மைத்துறை வல்லுநர்கள் 23 பேர்களிடமும், மருத்துவத்துறை வல்லுநர்கள் 33 பேர்களிடமும், பொறியியல் தொழில்நுட்பத் துறை வல்லுநர்கள் 28 பேர்களிடமும் ஆகக் கூடுதல் 133 வல்லுநர்களிடமும் கட்டுரைகள் வேண்டப்பட்டுள்ளன.

தற்போது வேளாண்மைத்துறை வல்லுநர்களிடமிருந்து 10 கட்டுரைகளும், மருத்துவத்துறை வல்லுநர்களிடமிருந்து 4 கட்டுரைகளும், கால்நடைத்துறை வல்லுநர்களிடமிருந்து 4 கட்டுரைகளும், பொறியியல் துறை வல்லுநர்களிடமிருந்து 4 கட்டுரைகளும் (ஆகக் கூடுதல் 22 கட்டுரைகள்) அறிவியல் மலருக்கு வரப்பெற்றுள்ளன.

அறிவியல் உட்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களால் இக் கட்டுரைகள் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றன.

அறிவியல் கட்டுரைகள் சம்பந்தப்பட்ட துறை வல்லுநர்களிடமிருந்து 30.9.94க்குள் எதிர்பார்க்கப்படுகின்றன.

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் மாணவர்கள் பங்கு கொள்ளவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவர்களிடையே கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, ஓவியப் போட்டி நடத்தி அதில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாவதாகத் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்குத் தனித்தனியே மாநாட்டில் பரிசுகள் வழங்கிச் சிறப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



நம்பிக்கையைக் கைவிடாதே. அதுதான் வெற்றியின் முதல் படிக்கட்டு.

–பேரறிஞர் அண்ணா

இப்போட்டிகள் நடத்த பள்ளிக் கல்வி இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநர் மற்றும் பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். போட்டிகள் நடத்தத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறந்த கட்டுரைகளும், ஓவியங்களும், கவிதைகளும் மலரில் இடம் பெற்று, அது 'மாணவர் மலராக' மலரும்.

மாநாட்டு ஏற்பாடுகள் குறித்து நாளிதழ்கள், திரையரங்குகள், தனியார் தொலைக்காட்சி அமைப்புகளில் விளம்பரமாக வெளியிடவும், மாநாட்டு நிகழ்ச்சிகள் ஒளிப் பதிவு செய்தல், தொலைக்காட்சி, வானொலி மூலம் நேர்முக ஒளி, ஒலிபரப்ப ஏற்பாடு செய்யவும், மாநாட்டின் போது சென்னை, தஞ்சை நகரங்களில் தகவல் மையங்கள் அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## சிறப்பு மருத்துவ ஏற்பாடுகள்

தஞ்சை நகருக்கு வரும் அனைத்து முக்கிய நெடுஞ்சாலைகளிலும் தற்காலிக மருத்துவமனைகள் நிறுவவும், அவற்றில் முதலுதவி சிகிச்சைக்கான வசதிகளும், ஆம்புலன்ஸ் வசதியும் அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் தஞ்சை நகரில் பல்வேறு இடங்களிலும் மருத்துவ மையங்கள் நிறுவவும் இரத்தச் சேமிப்பு வங்கி மூலம் அவசரத் தேவைக்காக உடனுக்குடன் சமாளிக்கவும் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் ஆய்வரங்கக் குழுத் தலைவராக இம்மாநாட்டின் ஆய்வரங்க நிகழ்ச்சிகளைப் பொறுப்பேற்று நடத்தும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் தலைவர் பேராசிரியர் திரு. நோபொரு கரஷிமா பொறுப்பேற்றுள்ளார். இம்மாநாட்டின் ஆய்வரங்க ஏற்பாடுகளை நேரில் பார்வையிட 23.9.94 அன்று தஞ்சைக்கு வருகை புரிந்த பேராசிரியர் திரு. கரஷிமா, தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரை நேரில் சந்தித்துப் பேசுகையில் இம்மாநாட்டிற்காகத் தஞ்சை நகரில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு சிறப்புப் பணிகளையும்; மாநாட்டில் கலந்துகொள்ள வரும் பேராளர்கள், பார்வையாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் ஆகியோருக்காகத் தங்குமிட வசதி, விருந்தோம்பல், போக்குவரத்து ஏற்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் விளக்கிக் கூறினார். இப்பணிகள் நடைபெறும் இடங்களை நேரில் சுற்றிப் பார்த்த பேராசிரியர் திரு. கரஷிமா, இதுவரை நடைபெற்ற மாநாடுகளைவிட எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்காகத் தஞ்சை நகரில் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் தமக்குப் பிரமிப்பூட்டுவதாக அமைந்துள்ளதாகவும், தான் ஜப்பான் நாட்டுக்குத் திரும்புமுன், சென்னையில் தமிழக முதலமைச்சரையும், பிற அமைச்சர்களையும் நேரில் சந்தித்துப் பேச இருப்பதாகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்பிற்கும், சீர்மிகு வளர்ச்சிக்கும் பெருமை சேர்க்கும் வகையில் இரண்டு உலகத் தமிழ் மாநாடுகளைக் கண்ட தமிழகம் 8வது உலகத் தமிழ் மாநாட்டினை நடத்தும் பேறு பெற்றுள்ளது. தமிழக மக்களுக்கு மட்டுமல்லாது உலகெங்குமுள்ள தமிழர்களும் பெருமைப் படத்தக்கதொன்றாகும்.

இவ்வாறு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் கூறினார்.



# 8வது உலகத்தமிழ் மாநாடு:

'கண்ணுதற் பெருங்கடவுளும்
கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்து
ஆய்ந்தஇப் பசுந்தமிழ்ஏனை
மண்ணிடைச்சில இலக்கண
வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்படக் கிடந்ததா
எண்ணவும் படுமோ!'

-என்கிறது திருவிளையாடல் புராணம். அன்னைத் தமிழின் முன்னைச் சிறப்பை இதன்மூலம் நாம் அறிந்திடலாகும்.

'யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோல்
இனிதாவது
எங்கும் காணோம்!...'

-என்று பெருமிதத்தோடு பாடி, அருமைத் தமிழின் அகலாச் சுவையை அறிவித்தார் முறுக்கு மீசை முண்டாசுப் பாரதியார்.

'தமிழுக்கும் அமுதென்றுபேர்-
அந்தத்
தமிழ்இன்பத் தமிழெங்கள்
உயிருக்கு நேர்!'...

-என்கிற சந்தக் கவிதையால், நாம் செந்தமிழை உயிருக்கு நிகராக்கிச் சிறப்புச் சேர்த்தார் புதுவைக் குயிலாம் புரட்சிக் கவிஞர்.

இவ்வளவு அருமைக்கும் பெருமைக்கும் உரிய- 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்கிற நன்நோக்கத்தோடு நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், எட்டாம் உலகத் தமிழ்

# நெஞ்சை அள்ளும் தஞ்சை மாநாடு!

மாநாட்டைக் காவிரியால் பூவிரியும் தஞ்சையிலே, இணையற்ற வகையிலே நடத்திடத் திட்டமிட்டிருக்கிறார்.

அம் மாநாடு வருகிற சனவரித் திங்கள் முதல் நாளிலிருந்து 5-ஆம் நாள் வரை நடைபெற விருக்கிறது. நெஞ்சையள்ளும் பிரகதீசுவர் கோயில் தலை நிமிர்ந்து நிற்பதாலே புகழ் பெற்றிருக்கிற – நஞ்சை மலிந்துள்ளதால் பஞ்சம் போக்கி நலம் சேர்க்கிற தஞ்சை மண், உலகத் தமிழ் மாநாடு கண்டு உலகப் புகழ் ஈட்டவிருக்கிறது.

## பெருமை பெறவிருப்போர்!

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்களும், பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களும் அம் மாநாட்டிற்கு வருகை தரவிருக்கிறார்கள்; சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து தமிழை வாழ்த்தி, அதனாலே பெருமை பெறவிருக்கிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அன்பான அழைப்பைக் கனிவோடு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் அந்தப் பண்பான பெரியவர்கள்.

## நலத் திட்டப் பணிகள்

பயிர் செழிக்க வேண்டுமானால், மண் சிறக்க வேண்டும்; அதைப் போல, தமிழ் மாநாடு சிறக்க வேண்டுமானால், அம் மாநாடு நிகழிடத்தின் நலங்கள்-வளங்கள் பெருக வேண்டும் அல்லவா?

அல்லும் பகலும் அதற்கெனத் திட்டமிட்டு இதயம் நிறைந்த நல்லெண்ணத்தோடு, தென்னாட்டின் நெற்களஞ்சியமாம் தஞ்சை மாநகரின் முக்கியத் தேவைகளை நிறைவு செய்திடப் பல்வேறு முக்கியப் பணிகளுக்காக மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் தலைமையில் புகழ் பெறும் தமிழ்நாடு அரசு, தற்போது பல நிதி ஒப்பளிப்புகளை வழங்கியிருக்கிறது. இதனால், இராசராச சோழனும், இராசேந்திர சோழனும் ஆண்ட காலத்திய பெருமை புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல; சோறுடைத்து என்ற பெயர் பெற்ற சோழ நாட்டுத் தஞ்சைக்கும் திரும்பவிருக்கிறது!

தமிழ் மாநாட்டையொட்டி நலத் திட்டப் பணிகள் பல தஞ்சாவூரிலே நாளொருமேனி பொழுதொரு வண்ணம் நிறைவேற்றப்பட்டபடியிருக்கின்றன! ஏராளமானோர் அந்த நகருக்கு புதுப் பொலிவூட்டும் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

## குறிப்பிடத்தக்கவை

மாநாடு எனில், அலையலையாய் மக்கள் அணிதிரளக்கூடும் அல்லவா? அதனால், போக்குவரத்தை எளிதாக்க ஊர்ச் சாலைகள் செப்பனிடப்பட்டு அகலமாக்கப்படுகின்றன; அழகாக்கப்படுகின்றன. ஆங்காங்கே ஒளி விளக்குகள் இரவைப் பகலாக்குகின்றன.

கீழ்ப் பாலமாகக் குறுகலாக இருந்த ரெயில்வே பாலம், தங்குதடையற்ற போக்குவரத்திற் கேற்றபடி அகலமான மேம் பாலம் ஆக்கப்பட்டு வருகிறது; இதற்கென மைய அரசின் ரயில்வே நிர்வாகத்திற்கு மாநில அரசால் முதல் கட்டமாக ரூ.50 இலட்சம் அளிக்கப்பட்டிருக்கிறது.

மாநாட்டிற்கு வருகைதரும் மக்கள், முன்னர் முடி மன்னர்கள் தஞ்சையில் உருவாக்கிய சரித்திரச் சிறப்புமிக்க இடங்களை– தம் புகழ் நிலைக்க அவர்கள் பதித்த அந்த அற்புதத் தடங்களை ஓய்வு நேரத்திலே கண்டு வுவக்க வருகைதரக் கூடுமல்லவா? எனவே, தஞ்சை அரண்மனை, கலைக்கூடம், சங்கீத மகால் போன்ற இடங்களில் புதுமெருகு கூட்டப்படுகிறது!

நாயக்கர் மகாலிலும், மராட்டிய மன்னர்களால் உருவாக்கப்பட்ட தர்பார் மண்டபத்திலும் உள்ள சிற்பங்களுக்குப் புதுப் பொலிவூட்டி வண்ணங்கள் தீட்டி உயிரூட்டப்பட்டு வருகிறது. இத்தகு பணிகளுக்கென ரூ.12 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்த இராசராசனால், மலைவளமே இல்லாத சோழ மண்ணில், கலை வளம் மிக்கதான கற்சிற்பங்கள் நிறைந்த பெரிய கோயிலை எப்படிக் கட்ட முடிந்தது என்பது இன்றும் விளங்காத வரலாற்றுப் புதிர்!

விந்தையான அந்தப் பெருங் கோயில், உலகத் தமிழ் மாநாட்டுக் காலத்தில் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் கண்ணைக் கவரும் வண்ண விளக்குகளால் வனப்புக் கூட்டப்படவிருக்கிறது.

## வசதி வாய்ப்புகள்

வெள்ளம் போல் தமிழர் கூட்டம், வீரங்கொள் கூட்டம்; எல்லோருக்கும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் மேல் நாட்டம் என்பதால் இலட்சோப இலட்சமா, கோடானு கோடியா வருகை தருவோர் எண்ணிக்கை ¬ என்பதை இப்போதே கணித்தறிய முடியாத நிலை!

மக்கள் நெருக்கத்தால் சிறு விபத்துகள், இன்னல்தரும் நோய்கள் ஏதேனும் நேரக்கூடும் என்பதாலே மருத்துவ வசதிகள் தஞ்சை நகரில் திருத்தமுறச் செய்யப்பட்டு வருகிறது. தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மட்டும் இதற்காக ஏறத் தாழ ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.



'கல்வியில்லாத பெண்கள் களர் நிலம்' என்று பாவேந்தர் பாடியதால்- குந்தவை நாச்சியார் மகளிர் கல்லூரி வசதிகளைக் கூட்ட ரூ.30 இலட்சம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

நகரின் அடிப்படை வசதிகளை மக்கள் வருகைக்கேற்பக் குறைவற்றதாக்க, திட்டமிட்ட நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டிருக்கின்றன.

### பாதுகாப்புப் பணிகள்

உலகத் தமிழ் மாநாட்டிற்கு உவகையோடு வருகைதரும் முக்கியப் பிரமுகர்களுக்கு மட்டுமல்ல-

'எங்கள் தமிழ்த்தாய் ஏற்றம் பெறுகிறாள்' என்கிற இதயப் பூரிப்போடு வருகை தரும் கணக்கிலடங்கா மக்களும் கவலை மறந்து உடல் நலம் சிறந்து மாநாட்டு நிகழ்ச்சிகளை மன நிறைவோடு கண்டு களிக்கும் வகையிலே பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பக்குவமாகச் செய்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆலோசனைப்படி, காவல் துறையினரால் உரிய நடவடிக்கைகள் ஊக்கத்தோடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### மாநாட்டு மலர்

'மண்ணாவதும் சோழ மண்டலமே' என்று புலவர் பாடிய புகழ் மிக்கதான தஞ்சாவூரில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டின் முதல் நாளன்று, சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்படவிருக்கிறது. கருத்துப் பேழையாய், கவிதைச் சோலையாய், வண்ண மாலையாய் இதழ் அவிழ்த்து காண்போரைக் கவரும் கவர்ச்சி மலராக மட்டுமல்ல; நுகர்வோரின் இதயத்தைக் கொள்ளை கொள்ளுவதாகவும் அந்தத் தேன்மலர் திகழப் போகிறது!

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில், சிறப்பு மலர்க் குழுவினர் பசி நோக்காது கண்துஞ்சாது இரவு பகலாகப் பாடுபட்டு வருகிறார்கள்.

### முதல் நாள் - நிறைவு நாள் ஊர்வலங்கள்

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு தொடங்கப்படும் முதல் நாளும்- அது நிறைவுறும் கடைசி நாளும், சோழ நாடே கோலாகலமான விழாக்கோலம் பூணவிருக்கிறது!

நம்மவர்களோடு- முக்கியப் பிரமுகர்கள், அண்டை மாநிலத்தார், அயல்நாட்டார் எனப் பல தரப்பாரும் பங்கேற்கும் அவ்விரு நாட்களிலும் நடத்தப்படவிருக்கும் ஊர்வலங்கள், இதுவரை தமிழ் நிலம் காணாத சிறப்புடையதாக விளங்கும். சேமமுற்ற தஞ்சை மண்ணின் தெருவெல்லாம் தமிழ் முழங்கும்!

'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' எனக் கேட்பது போல், அந்தக் காலத்து முப்படையும் அணிவகுக்கும்!...

அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படை, காண்போரைச் சிலிர்க்க வைக்கும்!...

அழகு ரதங்கள் உலா, பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும்...

வண்டுபாடும் தஞ்சாவூர்க் கதம்பம், வகையுற எங்கும் மணக்கும்!...

'வருக வருக' என வரவேற்கும் பல வண்ணப் பட்டுக்கொடிகள் வீதியெலாம் பறக்கும்!...

கிராமியக் கலை நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், காண்போர் மனம் மயக்கும்!...

மாவிலை தென்னங் குருத்தோலைத் தோரணங்கள் வீதிகள் தோறும் ஊஞ்சலாடும்!...

ஓலைச் சப்பரங்கள், வகை வகையான வரவேற்பு வளைவுகள், வண்ணப் பதாகைகள், ஊரெங்கும் திகழும்; ஊர் மக்களிடையே உற்சாகம் கரைபுரளும்!

முதல் நாளிலிருந்து நிறைவு நாள் வரை, நகரெங்கும் கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமண்டபம், ஆய்வரங்கம், வீரவிளையாட்டுகள், கலை நிகழ்ச்சிகள்- கற்றறிவாளரையும் திகைக்க வைக்கும்...

தன் காலத்தே நடைபெறும் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு, இதற்கு முன் எவர் காலத்திலும் நடந்திராததாய் சிறப்புற்றிட வேண்டும்; இனி வேறெவர் காலத்திலும் நடத்திக் காட்ட முடியாததாய் புகழ் பெற்றிட வேண்டும் என்கிற உறுதிமிக்க உள்ளத்தோடு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தீர ஆலோசித்துத் திட்டமிட்டுப் பணியாற்றி வருகிறார்!



**வரவேற்பு வளைவு**

உலகம் புகழ நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டுக்கு வருகை தரும் மக்களை வரவேற்கத் திருச்சி சாலையில் அமைக்கப்பட்டு வரும் வரவேற்பு வளைவு.

# 8-வது உலகத் தமிழ் மாநாடு:

**நினைவுத்தூண்**

தொல்காப்பியர் சதுக்கத்தின் அருகே அமைக்கப்பட்டுவரும் நினைவுத்தூண்.





**திருவள்ளுவர் மண்டபம்**

குறள் தந்து, குவலயம் விளங்க நெறி தந்த வளளுவர் புகழ்சிறக்க திருவள்ளுவர் மண்டபம் திருவுடன் உருவாகிறது.



**மணிமாடம் புனரமைப்பு**

தமிழக அரசின் நிதியுதவியுடன் தஞ்சை அரண்மனை வளாகத்திலுள்ள, மணி மாடத்தைத் தொல்பொருள் ஆய்வுத்துறை புதுப்பொலிவு காட்ட புனரமைப்பு செய்யும் காட்சி.

# தஞ்சை தயாராகிறது!

**ரெயில்வே மேம்பாலம்**

மிகக் குறுகலாக இருந்த தஞ்சாவூர் ரெயில் பாலம், போக்குவரத்து வசதிக்கு ஏற்ப அகலப்படுத்தப்படுகிறது.





அட்டை சொல்லும் செய்தி

# 'தென்னகத்து நேதாஜி!'

## பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார் சிலை திறப்பு விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் புகழாரம்

தமிழக மக்களின் இதயங்களில் என்றென்றும், பத்தரை மாற்றுத் தங்கமாகக் குடி கொண்டிருக்கும், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெருமகனாரின், திருவுருவச் சிலையை, தமிழகத்தின் தலைநகராம், சென்னை மாநகரில் திறந்து வைத்ததில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

அதே மகிழ்ச்சி வெள்ளம், இங்கே என் எதிரில், முப்புறமும் கூடியுள்ள மக்கள் மத்தியில், கரைபுரண்டு ஓடுவதை, என்னால் காண முடிகின்றது. இந்தத் தேசத்தின் விடுதலைக்காக, எண்ணற்ற தியாகங்களைச் செய்திட்ட, ஒரு பத்தரை மாற்றுத் தங்கத்திற்கு, சென்னை நகரில், ஒரு சிலை நிறுவப்படாதது, சாதி, மதப் பேதங்களைக் கடந்து, அனைவரின் நெஞ்சங்களிலும், ஒரு குறையாகவே இருந்து வந்தது. தனக்கென்று வாழாமல், பிறர்க்கென்று, வாழ்ந்திட்ட, பெரியோர்களின் சேவையை நினைவு கூர்ந்து, சிலை எழுப்பி விழாக் கொண்டாடும், மாபெரும் கலாச்சாரத்தைப் படைத்த தமிழ் நாட்டில், இந்த நிலை தொடர்ந்தது வேதனைக்கு உரியது தான்.

இடையிலே சில ஆட்சியாளர்களின் கவனத்திற்கு, இந்தக் குறை எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. அன்று அதிகாரத்தில் இருந்தவர்களில் சிலர், மக்களின் விருப்பத்தை மதிக்க விரும்பாமல், தேவருக்குச் சிலையா? என்று ஏகடியம் பேசியிருக்கிறார்கள்.

ஆனால், உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சில நாட்களில், இந்தக் குறைபாடு, என்

> தனக்குக் கிடைக்கிற ஊதியத்தின் மதிப்பைக் காட்டிலும், தன்னுடைய உழைப்பின் மூலமாக மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதனே சமூகத்தில் உயர முடியும்.
>
> –ஆபிரகாம் லிங்கன்

கவனத்திற்குக் .கொண்டு வரப் பட்டபோது தேசியத்தையும் தெய்வீகத்தையும், தனது இரு கண்களாகக் கொண்டு, செயல் பட்ட ஒரு உத்தமருக்கு, இத் தனைக் காலமும் சென்னையில், சிலை இல்லாமல் செய்து விட் டார்களே, என்ற கவலை தான் மேலோங்கியது. சக்கரவர்த்தி போல வாழ்ந்திருக்க வேண்டிய ஒருவர், சந்நியாசியாகவே வாழ்ந்து மறைந்தாரே! அந்தத் தியாக சீலருக்குச் சிலை வைத்து, தமிழ் நாட்டின் நல்ல மரபைக் காப் பாற்றுவது என, அன்றே உறுதி பூண்டேன்.

சென்னையின் மையப் பகுதி யில், தேவரின் சிலையை வைக்க, மனம் திறந்து அனுமதி வழங் கினேன். பின்னர் சில கருத்து வேறுபாடுகளால், சிலை அமைக் கும் பணி, தாமதப்படும் என்ற சூழ்நிலை ஏற்பட்டபோது, அர சின் சார்பில், "தேவர் சிலை அமைப்புக் குழு'' ஒன்றை அமைத்து, ஆணையிட்டேன்.

சிலை அமைக்கும் பணியையும், நிதி சேர்க்கும் பணியையும், துவக்கி வைக்கும் வண்ணம், எனது சார்பில் நன்கொடையை வழங்கினேன். நமது அனைவரின் முயற்சிகள், இன்று திருவினை யாகி, தென்னகத்தின் நேதாஜி யாம், தேவர் பெருமகனாரின் திருவுருவச் சிலை, இங்கே கம்பீர மாகக் காட்சி அளித்துக் கொண் டிருக்கிறது.

தேவர் மறைந்து 31 ஆண்டு களுக்கு மேலாகியும், இன்றும் தேவர் என்றால், அது பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களை மட்டுமே குறிக்கும்.

குன்றிலிட்ட விளக்கான அவ ரது புகழை, சிலர் மறைக்க முயன்றபோது, தனக்கே உரித் தான பாணியில், அவரது சிறப்பை, குவலயம் முழுவதும் அறியும் வண்ணம் செய்திட்டவர், நமது இதய தெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தான். தேவர் திருமகனார் பிறந்த நன் னாளைத், "தேவர் ஜெயந்தி'' விழாவாக, அரசு தரப்பில் கொண்டாட ஆணையிட்டார். சட்டமன்றப் பேரவையில், அவர் திருவுருவப் படத்தைத் திறக்கச் செய்தார். அதுமட்டுமின்றி, அவர் பெயரால், ஒரு மாவட்டத்தையே அமைத்தார்.

ஆனால், பின்னால் வந்த ஆட்சியாளர்கள், அந்தப் பெய ரைச் சிதைத்து அறிவித்தனர். ஆட்சிப் பொறுப்பேற்ற உடன், உங்கள் அன்புச் சகோதரி, உங்கள் அனைவரின் எண்ணங் களைப் பிரதிபலிக்கும் வண்ணம், தேவர் பெருமகனாரின் முழுப் பெயரில், மீண்டும் அந்த மாவட் டத்தை, "பசும்பொன் முத்துராம லிங்கத் தேவர் மாவட்டம்", என அறிவித்ததை நினைவுகூர்வதில், மகிழ்ச்சி அடைகின்றேன்.

தேவரின் புகழ் என்றென்றும் நிலைத்திருக்க, நடவடிக்கைகள் எடுப்பதில், உங்கள் அன்புச் சகோதரி, எப்பொழுதும் தயா ராக இருக்கிறேன், என்பதை உணர்த்தும் வகையில் தான், இந்தச் சிலைத் திறப்பு விழா, இத்தனைச் சீரோடும் சிறப் போடும் நடைபெற்றுக் கொண்டி ருக்கிறது.

இளம் பருவத்திலேயே, தனது மனத்திற்குச் சரியெனப்பட் டதை, துணிந்து செய்யும் துணி வும், உறுதியும் படைத்தவராய், தேவர் பெருமகனார் இருந் துள்ளார்.

சிறு வயதிலிருந்தே, நெற்றி நிறைய திருநீறு அணியும் வழக் கத்தை, தேவர் திருமகனார் கொண்டிருந்தார். அவர் படித்த பள்ளிக்கூடத்தில், திருநீறு அணி வதற்குக் கட்டுப்பாடு விதிக்கப் பட்டபோது, ''பள்ளியை வேண்டுமானால் மாற்றிக் கொள் வேனே தவிர, நெற்றியில் திருநீறு அணியும் வழக்கத்தைக் கைவிட மாட்டேன்'' என்று, உறுதியுடன் இருந்தார். அந்த உறுதியின் கார ணமாகத் தான், அவர் நம்மை விட்டுப் பிரியும் வரை, அவரது நெற்றி, நிறைந்த திருநீற்றோடு விளங்கியது.

தனது பள்ளிப் படிப்பை முடித்த நேரத்தில், ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு, எப்படியா வது சாவு மணி அடிக்க வேண் டும் என்ற எண்ணம், அவர் நெஞ்சில் மேலோங்கி நின்றது. என்ன விலை கொடுத்தாவது, சுதந்திரத்தைப் பெற, இந்திய மக்களைத் தயார் செய்ய வேண் டும் என்று, தீர்க்கமாக இருந்தார். அந்த எண்ணங்களின் விளை வாகத் தான், நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் அவர்களின் தலை மையை, எதற்கும் அஞ்சாத சிங்க மான தேவர் அவர்கள், ஏற்றுக் கொண்டார்கள்.

சுபாஷ் சந்திரபோஸ், பால கங்காதர திலகர், போன்ற தீவிர வாத தேசியத் தலைவர்களோடும் தீவிரவாத கொள்கைக் கூட்டத் திற்கு அன்று, தமிழகத்தில் தலைமை ஏற்றிருந்த, சீனிவாச ஐயங்கார் போன்றவர்களின் உறு துணையோடும் தேவர் பெருமக னார் தமிழகம் எங்கும், விடுதலை வேட்கை எனும் தீப் பிழம்பு களை ஏந்தி, வலம் வந்தார். குறிப் பாக, தமிழகத்தின் தெற்குப் பகுதி களில், சுதந்திரத் தாகம் கொழுந்து விட்டு எரியச் செய்ததில், தேவர்

**உங்களைத் தெரிந்துகொள்ள உங்கள் மூளையை உபயோகியுங்கள். பிறரைத் தெரிந்து கொள்ள உங்கள் இதயத்தைப் பயன்படுத்துங்கள்.**

**–ஷேக்ஸ்பியர்**

அவர்களின் பங்கை, எவரும் குறைத்துச் சொல்ல முடியாது.

ஆங்கில ஆட்சியாளர்களுக்குத் தேவர் ஒரு சிம்ம சொப்பன மாகவே விளங்கினார் என்பதை, அவர் ஆங்கிலேயர்களால் அடக்குமுறைக்கு ஆளாக்கப் பட்டு, எத்தனை முறை சிறைக்கு அனுப்பப்பட்டார் என்பதி லிருந்து, தெரிந்து கொள்ள முடியும். கடுமையான சட்டப் பிரிவுகளின் கீழ், பல்வேறு வழக்குகளில் ஆட்படுத்தப்பட் டார். அன்றைக்குத் தமிழகத்தில் இருந்த, பெரும்பாலான சிறைச் சாலைகள், அனைத்திலும் அடைக்கப்பட்ட ஒரே அரசியல் தலைவர், தேவர் திருமகனார் தான்.

வீரம், விவேகம், தன்னடக்கம், எளிமை, போன்ற பண்புகளின் ஒட்டுமொத்த சின்னமாக, அவர் விளங்கியதால், ஒரு புறம் சுவாமி விவேகானந்தரின் வடிவாகவும், மறு புறம், சுபாஷ் சந்திர போஸின் வடிவாகவும் அவர் திகழ்ந்தார்.

தெய்வீகச் சேவைக்கும், தேசியச் சேவைக்கும், எங்கே தனது மண வாழ்வு, இடையூறாக அமைந்துவிடுமோ என்று, முற் றும் துறந்த முனிவராக வாழ்ந்த தேவர், தன்னை நம்பிய மக் களின் நன்மைக்கும், நல்வாழ் விற்கும், எத்தகைய தியாகத் தையும் செய்யத் தயங்கியது இல்லை.

1934-ஆம் ஆண்டு, ஆங்கிலே யர்கள் கொண்டு வந்த, குற்றப் பரம்பரைச் சட்டத்தைத் தகர்த் தெறிய,தன்னந்தனியாகப்போராடி அவர் வெற்றி பெற்றதே, அதற்கு ஓர் எடுத்துக்காட்டு. குறிப்பிட்ட சமுதாய மக்கள், தினமும் காவல் நிலையத்திற்குச் சென்று, கை ரேகை வைத்துச் செல்ல வேண்டும் என்றும் வெளியூர் செல்வதாக இருந்தால், காவல் துறையினரின் அனுமதி பெற்ற பின்பே, செல்ல வேண்டும் என்றும் பிறப்பிக்கப்பட்ட ஒரு சட்டத்தை எதிர்த்து, அவர் போராடிய காரணத்தால் தான், அந்த இருட்டுச் சட்டம், ஆங்கில அரசால் திரும்பப் பெறப்பட்டது. ஒரு சமுதாயத்திற்கு நேர இருந்த, இழிவைத் தடுத்தவர் என்பதால் தான், இன்றைக்கும் அந்தப் பகுதி மக்கள், அவரைத் தெய்வமாக வழிபட்டு வருகிறார்கள்.

1937-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில், அன்றைய இராமநாத புரம் சமஸ்தானத்தின், ராஜா சேதுபதியை எதிர்த்து, மிகவும் துணிவுடன் போட்டியிட்டார். எங்கே பசும்பொன் முத்துராம லிங்கத் தேவர் அவர்கள், காட் டாறு போன்ற, தனது கருத் தாழமிக்க பேச்சுக்களால், மக்கள் மனத்தைக் கவர்ந்து விடுவாரோ என்று பயந்து; எந்த மேடை யிலும், அவர் சொற்பொழிவு ஆற்றக் கூடாது, என்று வாய்ப் பூட்டு போட்டது, அன்றைய ஆங்கிலேய அரசு. ஆனால் ஒவ்வொரு மேடையிலும், ஒரு ஞானியைப் போல அமர்ந்து விட்டு, மக்களைப் பார்த்து கரம் கூப்பி, வணக்கம் தெரிவித்து விட்டு ஒரு வார்த்தைக் கூடப் பேசாமல், அந்தத் தேர்தலிலே, மாபெரும் வெற்றியைப் பெற்றுக் காட்டியவர், தேவர் திருமகனார் என்றால், எந்த அளவிற்கு மக்கள் மனதை, அவர் ஆக்கிரமித்து இருந்தார் என்பது தெளிவாகும்.

அவரது சமூக, அரசியல், மற்றும் ஆன்மீகக் கருத்துக்கள், உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சிக்கு, அடிப்படையாக அமைந்து உள்ளன என்பதை, நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

"விவேகம் அற்ற வீரம், முரட்டுத்தனம்' வீரம் அற்ற விவேகம், கோழைத்தனம்" என்று முழங்கியதோடு மட்டுமின்றி, நடைமுறைப்படுத்தியும் காட்டியவர், தேவர் அவர்கள்.

தேவர் பெருமகனாருக்குச் சென்னை நகரில் சிலை வைக் கும் இந்த நல்ல நாளில், நீங்கள் அனைவரும் மகிழ்ச்சி கொள் ளும்வண்ணம், சில அறிவிப்பு களை வெளியிடுவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

1. நந்தனம் சந்திப்பில் இருந்து பிரிந்து செல்லும், Chamiers சாலை, இன்று முதல், "பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் சாலை", என்று வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. பசும்பொன் தேவர் விட்டுச் சென்ற சொத்துக்களைப் பரா மரிக்க, அவரது பேரில் ஒரு அறக் கட்டளை அமைக்கப்பட்டு இருந்தாலும், அந்த அறக்கட்டளை, நன்முறையில் பராமரிக்கப்பட வில்லை என்ற குறை, பலர் மனதில் இருந்து வருவதை, நான் அறிவேன். அந்த அறக்கட்டளை யின் கீழ் அமைந்த சொத்துக்கள், நன்முறையில் பராமரிக்கப்பட, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென, பலர் என்னிடம் கோரிக்கை வைத்து இருந் தார்கள். மக்கள் நலன் கருதி, அந்த அறக்கட்டளையினை நிர் வகிக்க, அரசின் உயர் அதிகாரி ஒருவர், தனி அதிகாரியாக நிய மனம் செய்யப்படுவார் என்பதை

# முத்தான அறிவிப்புகள் ஐந்து!

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சீருடன் சிலை திறந்து வைத்த கையுடன், சிறப்புமிகு அறிவிப்புகள் ஐந்தைத் தனது உரையிலே வெளி யிட்டார்:

**1.** பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைப் பற்றி ஆராய மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலே ஓர் ஆராய்ச்சி மையம்.

**2.** அண்ணா சாலையிலிருந்து பிரிந்து செல்லும் சேமியர்ஸ் ரோடு இனி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சாலை எனப் பெயர் மாற்றம்.

**3.** கள்ளர், மறவர், அகமுடையர் என முப்பிரிவாய்ப் பிரிந்து கிடக்கும் முக் குலத்தோர் யாவருக்கும் இன்று முதல் 'தேவர்' என்று ஒரே பெயர். எனினும், மிகப்பிற் பட்டோர் எனச் சலுகை பெற்ற பிரிவுகள் தொடர்ந்து அந்தச் சலுகை பெறலாம். மேலும், பிற்பட்டோர் நலக் குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலித்து தக்க முடிவு.

**4.** முத்துராமலிங்கத் தேவர் பிறந்த இல்லம் நினைவுச் சின்னம் ஆக்கப்படும். அரசு அதனைப் பராமரிக்கும்.

**5.** முத்துராமலிங்கத் தேவர் விட்டுச் சென்ற சொத்துக்களைப் பராமரித்துவரும் அறக் கட்டளையை நிர்வகிக்க, அரசு உயர்நிலை அதிகாரி ஒருவர் தனிஅலுவலராக நியமிக்கப் படுவார். இந்த அறக்கட்டளையே கமுதி கல்லூரியின் நிர்வாகத்தை ஏற்கும்.

யும்; தேவர் அவர்கள் பெயரில், கமுதியில் அமைந்துள்ள, கல் லூரியின் நிர்வாகமும், இந்த அறக்கட்டளையினால் மேற் கொள்ளப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. முன்னாள் சட்டமன்ற உறுப் பினர் திரு. கந்தசாமி அவர்கள் என்னிடம் விடுத்த கோரிக் கையை ஏற்றுக்கொண்டு, மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைப் பற்றி ஆய்வு மேற் கொள்ள, ஆராய்ச்சி மையம் ஒன்று விரைவில் தொடங்கப் படும் என்பதை மிக்க மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

4. பசும்பொன்னில், தேவர் அவர்கள் பிறந்த வீடு, தமிழக அரசின் சார்பில், நினைவுச் சின்னமாக மாற்றி அமைக்கப் படும் என்பதையும், அந்த நினை வுச் சின்னத்தை, தமிழக அரசே பராமரிக்கும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. கள்ளர், மறவர், அகமுடை யர் என்று இருக்கும், முக்குலத்து மக்கள், "தேவர்" என்ற ஒரே பேரில், அழைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையைப் பரி சீலனை செய்வதாக, நான் ஏற் கெனவே சட்டமன்றப் பேரவை யில், அறிவித்து இருந்தேன். மூன்று பிரிவுகளாக உள்ள இம்மக்கள், இன்று முதல், "தேவர்" என்ற ஒரே பிரிவாகக் கருதப்படுவார்கள் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், இவற்றில் சில பிரிவினர் மட்டும், மிகப் பிற் படுத்தப்பட்டவர் என்ற நிலை யிலும், சீர் மரபினர் என்ற நிலை யிலும், அனுபவித்து வருகின்ற சலுகைகள், தொடரும் என்பதை யும் தமிழக அரசு ஏற்படுத்தி இருக்கின்ற, பிற்படுத்தப்பட் டோர் ஆணையத்தின், பரிந்துரை களின் பேரில், தமிழக அரசு, தகுதியானதொரு முடிவை எடுக்கும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனிதருள் மாணிக்கமாய் வாழ்ந்து, மறைந்த தலைவர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு மட்டும் வேண்டி யவர், என்ற எண்ணம் இல் லாமல் அனைவருக்கும் எல்லா இனத்தவர்களுக்கும் எல்லாச் சமுதாயத்தவர்களுக்கும் வேண்டி யவர், என்கின்ற உணர்வை இங்கே அமைக்கப்பட்டிருக்கும் திருவுருவச் சிலை, நம் அனைவர் மனதில் ஏற்படுத்தும் என்று, உறுதியாக நம்புகிறேன்.

இந்த மாபெரும் மனிதரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைக்கும் வாய்ப்பு, எனக்குக் கிடைத்ததை எண்ணி, நான் உண்மையில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். அவர் காட்டிச் சென்ற தெய்வீகம், தேசியம், ஒற்றுமை, மக்கள் சேவை ஆகியவற்றை, நாம் என்றென்றும் மறக்காமல், தமிழ்நாட்டின் உயர் விற்காகப் பாடுபட வேண்டும் என்று, அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தேவர் பெருமகனாரின் சிலை யைக் காண்பதற்காகவும், எனது பேச்சைக் கேட்பதற்காகவும், தமிழகத்தின் பல்வேறு பகுதி களிலிருந்து திரண்டு வந்து, இந்த விழாவில் பங்கு கொண்ட உங்கள் அனைவருக்கும், எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# வண்ண விளக்கு-வரவேற்பு வளைவு-வாழ்த்துப் பதாகைகளோடு கோலாகல வரவேற்பு!

மக்கள் தொண்டைத் தனது உயிர் மூச்செனக் கொண்டு, தேசியமும், தெய்வீகமுமே தனது வாழ்வென வாழ்ந்த மகத்தான தலைவராம் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் சிலைத் திறப்பு விழா 19.10.94 அன்று சென்னையில் கோலாகலமாக நடைபெற்றது.

'தலைவன் என்றால் எப்படியிருக்க வேண்டும் என்று, தனியொரு இனத்திற்கு மட்டுமல்ல; இந்தத் தரணிக்கே எடுத்துக்காட்டி வாழ்ந்த ஒரு தலைவனுக்கு, அவன் புகழ் சிறக்க, தலைநகரிலே ஒரு சிலை திறக்க வேண்டுமெனக் கடந்த 30 ஆண்டுகளாக எவருமே எண்ணாதிருக்க, எங்கள் தலைவர் இனிய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவியன்றோ இன்று சிலை திறக்கிறார்' என விழாவிலே பங்கேற்றோர் பெரு மிதத்துடன் வாழ்த்துரைக்க, தமிழர்தம் பெருமகனாம் தேவரின் திருவுருவச் சிலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் திறந்து வைத்தார்.

11 அடி உயரமுள்ள பீடம். அதன் மீது, பொன் எனப் பொலிவு காட்டி, சிம்மமென நிற்கும் சிலையின் உயரம் 10 அடி, முழுவதும் வெண்கலம்; மதிப்பு 6 இலட்சம் ரூபாய். சிற்பி திரு ஜகன்னாதன்.

அண்ணா சாலை நந்தனம் சந்திப்பில் அழகுடன் அமையப் பெற்றுள்ள இச்சிலைத் திறப்பு விழாவிற்கு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை வகித்தார்.

தேவரின் திருவுருவச் சிலை திறக்க வருகை தந்த மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களில் இல்லத்திலிருந்து, விழா நடக்கும் நந்தனம் சந்திப்பு வரை, அண்ணா சாலை வழிநெடுக, வண்ண விளக்குகளும், வரவேற்பு வளைவுகளும், வாழ்த்துப் பதாகைகளும், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வாழ்த்தி அமைக்கப் பட்டிருந்தன. அண்ணா சாலையின் குறுக்கே வளைவுகள் அமைக்கப்படக் கூடாது என அரசுத்தடை இருப்பதைக் கருத்தில் கொண்டு, சாலையின் மருங்கில், வரவேற்பு வளைவுகள் வண்ணமுடன் அமைக்கப்பட்டிருந்தன.

விழா மேடையருகே, உயிருள்ளவையோ என வியக்க வைக்கும் வகையில் வடிவமைக்கப் பட்டிருந்த சிங்கங்களும், மாலையைத் துதிக் கையில் ஏந்திய பட்டத்து யானையும் வரிசை யாக நிற்க, பின்னணியில் சிம்மக் கர்ஜனை முழங்க, ஆலயங்களில் அறநெறி வளர்க்கும் அந்தணர்கள் பூரண கும்பங்களுடன் திருச் சொல் அருளி வரவேற்க, மாண்புமிகு முதல மைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் விழாவுக்கு வருகை தந்தார்.

விழாத் தலைவர் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் "சிங்கம் நிகர்த்த எங்கள் தலைவி, சிம்மமென வாழ்ந்த தலைவரின் சிலை திறப்பார்", என அறிவிக்க, மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் படகு வடிவப் பிடியில் பதிக்கப்பட்டிருந்த பொத்தானை அழுக்க, சிலையைச் சுற்றியிருந்த பச்சைப் பட்டுத் திரை மெல்லக் கீழிறங்க, "தேவரய்யா வாழ்க! புரட்சித்தலைவி வாழ்க!' எனும் மக்கள் முழக்கம் விண்ணைப் பிளக்க, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் சிலை திறக்கப் பெற்றது.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சிறப்பு மிகு அறிவிப்புகள் ஐந்தைத் தம்து உரையில் வெளியிட்டார்:

ஒவ்வோர் அறிவிப்பின் போதும், இலட்சோப இலட்சமாகக் கூடியிருந்த பொதுமக்கள் அனைவரின் கரவொலியும் விண்ணை முட்ட, அதன் எதிரொலியோ எனும் வண்ணம் "தேவரய்யா வாழ்க! புரட்சித்தலைவி வாழ்க!' என்று மக்கள் முழங்கினர்.

சிலை வடித்த சிற்பி திரு. ஜகன்னாதன் அவர்களைப் பாராட்டி, தங்க மோதிரம் ஒன்றை, மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பரிசாக வழங்கினார்.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. [illegible]மா. பரமசிவன் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், திரு. ஆண்டித் தேவர், திரு. சிங்காரம், திரு. எஸ்.வி. சண்முகம் ஆகியவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு கே. கந்தசாமி அவர்கள், தமிழ்நாடு தேவர் பேரவைத் தலைவர் திரு சீனிச்சாமித் தேவர் அவர்கள், ஓய்வுபெற்ற காவல்துறை உயர் அலுவலர் திரு. பொன். பரமகுரு அவர்கள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

முன்னதாக, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் வரவேற்புரையாற்றினார். விழா முடிவில், மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு. வி. சத்தியமூர்த்தி அவர்கள் நன்றி உரை யாற்றினார்.

திரைப்பட நடிகை திருமதி மனோரமாவின் இன்னிசை நிகழ்ச்சி விழாவில் நடைபெற்றது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலைத் திறப்பு விழா, எழில்மிகு விழா மட்டுமல்ல, அது ஏற்றமிகு விழாவும் கூட என்பதற்கு, தமிழகம் முழுவதிலிமிருந்து வருகை தந்திருந்த இலட் சோப இலட்சம் மக்கள் சாட்சியாக இருந் தார்கள் என்றால் அது மிகையல்ல.

நிகழ்ச்சித் தொகுப்பு: சாரதி





- முக்கியச் சாலைக்கு ராஜா முத்தையா பெயர்!
- பாடநூலில் அவருடைய வாழ்க்கை வரலாறு!

# டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் திருவுருவச் சிலைத் திறப்பு விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு

## அட்டை சொல்லும் செய்தி

எனது அரசியல் ஆசான், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால், "தமிழ் இசைக் காவலர்" என்று பாராட்டப்பெற்ற, டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களது திருவுருவச் சிலையின்னை, வரலாற்றுச் சிறப்பு மிக்க, எழில் மிகுந்த, இந்த ரிப்பன் மாளிகை வளாகத்தில் திறந்து வைத்ததில், நான் பெருமகிழ்ச்சியும், பேரு வகையும் அடைகின்றேன்.

தமிழகத்தின், ஒரு பெருமை மிக்க பாரம் பரியத்தையும், வரலாற்றுச் சிறப்பையும், ஒருங்கே பெற்ற குடும்பத்தைச் சேர்ந்த, ஒரு நல்லவரின் சிலை, இங்கே அமைக்கப் பட்டிருப்பது, எல்லா வகையிலும் ஏற்புடை யதாகும். சமுதாயத்தின் நலனுக்காகப் பாடுபடும், பெரியோர்களின் சிலைகளை அமைத்து, என்றென்றும் நினைவுகூரும் தமிழ்ப் பண்பாட்டின் வெளிப்பாடுதான், இங்கே கம்பீரமாகக் காட்சி தரும், ராஜா

# முத்தையா செட்டியார் வாழ்க்கை வரலாறு பாடநூலில் இடம் பெறுகின்றது

ரிப்பன் மாளிகை வளாகத்தில் 21.10.1994 அன்று ராஜா முத்தையா செட்டியார் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து விழாப் பேருரை ஆற்றும்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ராஜா முத்தையா செட்டியாரின் நினைவாக ரிப்பன் மாளிகைக்கு அருகில் உள்ள சைடன்ஹாம்ஸ் சாலை (Sydenhams Road) ராஜா முத்தையா சாலை என்று பெயர் மாற்றம் செய்யப்படும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து சைடான் 'ஹாம்ஸ் சாலை பெயர் மாற்றம் செய்யப்பட்டு ராஜா முத்தையா சாலை என்று வழங்குவதற்கான ஆணையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்துள்ளார். இதற்கான அரசாணை 24.10.1994 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதே விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், ராஜா முத்தையா செட்டியாரின் வாழ்க்கை வரலாறு, பாட நூலில் பாடமாகச் சேர்க்கப்படும் என்று அறிவித்தார். அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து ராஜா முத்தையா செட்டியாரின் வாழ்க்கை வரலாற்றைப் பாட நூலில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பள்ளிக் கல்வி இயக்குநரகமும், தமிழ்நாட்டுப் பாட நூல் கழகமும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

முத்தையா செட்டியாரின் திருவுருவச் சிலை.

ராஜா முத்தையா செட்டியார் அவர்களின் தந்தையார், ராஜா அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், தமிழுக்கும், தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கும், ஆற்றிய அரும் பணிகள், இன்னும் சரித்திரத்தில் பசுமையாகவே இருக்கின்றன. இந்த இருபதாம் நூற்றாண்டில், அவர் வழி வந்த ராஜா முத்தையா செட்டியார் அவர்கள், பாரம்பரியம் மிக்க அந்தக் குடும்பத்தின் பெருமையைத் தொடர்ந்து நிலைநாட்டும் வகையில், தமிழ்ச் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டினைப் போற்றி நினைவுகூர்வதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

அவரைத் தொடர்ந்து, அவரது புதல்வர், டாக்டர் M.A.M. இராமசாமி அவர்களும், அந்த மாபெரும் பாரம்பரியத்தை, அதே உணர்வுடன் பாதுகாத்துச் செயலாற்றி வருகின்றார். “நல்லதொரு குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்” என்பார்கள். ஆனால், இந்தக் குடும்பம், ஒரு பல்கலைக் கழகத்தையே அமைத்து, உயர் கல்விப் பணியின் வளர்ச்சிக்கு, உறுதுணையாகத் திறமையுடன் செயலாற்றி வரும், ஒரு தொடர் நிறுவனமாக மாறிவிட்டது, என்பதை எண்ணிப் பார்க்கும்போது, மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

கல்வி, கலை, இலக்கியம், பொருளாதாரம், வணிகம், மற்றும் அரசியல் என்று பல்வேறு துறைகளில், ஏதேனும் ஒரு துறையில் மட்டும் ஈடுபட்டு, ஒருவர் அதில் பாண்டித்தியம் பெறுவது என்பது, அரிதான காரியம் எனக் கூறிவிட முடியாது. ஆனால், தான் ஈடுபட்ட அத்தனைத் துறைகளிலும், தனது தனி முத்திரையைப் பதித்து, சிறப்பை எய்துவது என்பது, நிச்சயமாக எளிதானது அல்ல. வெகு சிலரால் மட்டுமே, அந்த பெருமையை அடைய முடிந்துள்ளது. ராஜா முத்தையா செட்டியார் அவர்கள், அந்த வெகு சிலரில் ஒருவராக, தமிழக வரலாற்றில், குறிப்பாக தமிழகத்தின் கல்வி வரலாற்றில், தனக்கென்று ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ளார். செயற்கரிய செயல் புரிந்தோர் பட்டியலில், அவர் இடம் பெற்றுள்ளதால் தான், இங்கே நாம் அவருக்கு, சிலை அமைத்து, பாராட்டி மகிழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்திய நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பே, ராஜா முத்தையா செட்டியார் அவர்கள், இந்த சென்னை மாநகராட்சியின் உறுப்பினராகவும், பின்னர், சென்னையின் முதல் நகரத் தந்தையாகவும், பணி புரிந்துள்ளார். இருபத்து நான்கு வயது முடிந்த நிலையில், ஒருவர் அன்றைய கால கட்டத்தில், சென்னை மாநகராட்சியின் உறுப்பினர் ஆவது, அவ்வளவு எளிதான செயல் அல்ல. ஆனால் ராஜா முத்தையா செட்டியார் அவர்கள், 24வது வயதில் உறுப்பினரானதோடு 28வது வயதில், சென்னை மாநகராட்சியின், முதல் நகரத் தந்தை, என்ற பதவியையும் வகித்துள்ளார் என்பதிலிருந்து அவரது செரிவார்ந்த அறிவையும், பல்கலைத் திறமையையும், நாம் அறிந்துகொள்ள முடியும். அந்த இளம் வயதிலேயே, எல்லா உறுப்பினர்களாலும், அவர் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார், என்பதை எண்ணிப் பார்க்கும் போது, அவர் எந்த அளவிற்குக் கூர்ந்த மதியுடனும், பரந்த மனதுடனும், உயர்ந்த எண்ணத்துடனும், செயல்பட்டிருப்பார் என்பது புலனாகிறது.

மூதறிஞர் ராஜாஜி அவர்கள், 1939-ஆம் ஆண்டு, அமைச்சரவை அமைத்தபோது, எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றி பின்னர் புதிய அமைச்சரவை பதவியேற்ற போது, அதில் ஒரு அமைச்சராகவும் பணியாற்றியவர், ராஜா முத்தையா செட்டியார் அவர்கள். பல ஆண்டுகள் தொடர்ந்து, சென்னை சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றி, அனைத்துக் கட்சியினரின் அன்பையும், நன்மதிப்பையும் பெற்றவர், முத்தையா செட்டியார் அவர்கள்.

தமிழகத்தில் கல்வி வளர்ச்சிக்கு, குறிப்பாக, உயர் கல்வி வளர்ச்சிக்கு, இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில், பலர் முயற்சி எடுத்தார்கள். ராஜா முத்தையா செட்டியார் அவர்களும், அவரது தந்தையார், அண்ணாமலைச் செட்டியார் அவர்களும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை அமைத்ததோடு அதை ஒரு சிறப்பு மிக்க கல்வி நிறுவனமாக மாற்றுவதில், தீவிர ஈடுபாடு கொண்டு செயல்பட்டார்கள். குறிப்பாக, ராஜா முத்தையா செட்டியார் அவர்கள், ஆற்றிய கல்விப் பணி, நன்றியுடன் நினைவுகூரத் தக்கதாகும்.

உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில், அமைந்துள்ள இந்த அரசு, ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன், கல்வித் துறையின் வளர்ச்சிக்கும், ஊரக வளர்ச்சிக்கும், அதற்குரிய முக்கியத்துவத்தை அளித்து, பல முன்னேற்றத் திட்டங்களைத் தீட்டி, முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

1991- 92-ஆம் ஆண்டு கல்வித் துறைக்கு, 1,299 கோடி ரூபாய் மட்டுமே, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், படிப்படியாக அந்த ஒதுக்கீடு உயர்ந்து, 1994-95-ஆம் ஆண்டில், 2,002 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

அனைத்து மட்டக் கல்வியின் வளர்ச்சிக்கு, நாங்கள் எடுத்துள்ள சீரிய முயற்சிகளும், அறிவொளித் திட்டத்தின்கீழ், தமிழகத்தில் உள்ள பெரும்பாலான மக்களுக்கு, அறிவுக் கண்களைத் திறந்து வைக்கின்ற பணிகளும், தமிழகத்தில் ஒரு புதிய எழுச்சியை, உண்டாக்கி வருகிறது என்பதில், ஐயமில்லை.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து, தமிழகத்தின் கல்வி வளர்ச்சியை நோக்கும் போது, கல்வி வளர்ச்சியின், முக்கியமான ஒரு கால கட்டத்தில், நாம் வாழ்ந்து வருகிறோம் என்ற உண்மை தெளிவாகும்.

தமிழ் மொழி, மற்றும் தமிழ் இசை, ஆகியவற்றின் வளர்ச்சியிலும், இந்தக் குடும்பத்தின் ஈடுபாட்டை, அனைவரும் அறிவார்கள். குறிப்பாக, ராஜா முத்தையா செட்டியார் அவர்கள், தமிழ் இசைச் சங்கத்தின் மூலம், தமிழ் இசையைப் பாதுகாக்க, மேற்கொண்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் ஒரு வகையில் தமிழ் இசையை, அழிவிலிருந்து காப்பாற்ற உதவியதோடு அந்தத் தேமதுரத் தமிழோசை, உலகெலாம் பரவவும், வழி வகுத்தது என்பதை, நாம் நிச்சயமாக மறுக்க முடியாது.

இந்த மண்ணில் பிறந்த ஒவ்வொருவரும், தனக்காகவும், தனது குடும்பத்திற்காகவும் மட்டும் வாழாமல், உயர்ந்த பொது நோக்கங்களோடு, சமுதாயத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும், என்கின்ற ஒரு அடிப்படைக் கருத்தைத்தான், ராஜா முத்தையா செட்டியார் அவர்களின் வாழ்க்கை வரலாறு, இன்றைய இளைய தலைமுறைக்கு, உணர்த்திக் கொண்டு இருக்கிறது.

பச்சையப்பன் அறக்கட்டளை நிறுவனம், இந்தியன் வங்கி, சென்னை மாநகராட்சி, சென்னைப் பல்கலைக்கழகம், இம்பீரியல் வங்கி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், ராஜா அண்ணாமலை மன்றம், மதுரா கோட்ஸ் நிறுவனம், பின்னி மில்ஸ் நிறுவனம் என்று பலதரப்பட்ட நிறுவனங்களில், தம்மை இணைத்துக் கொண்டு தமிழ்ச் சமுதாயத்தின் உயர்வுக்குப் பாடுபட்ட, ராஜா முத்தையா செட்டியார் அவர்களின், திருவுருவச் சிலையை, இந்த ரிப்பன் மாளிகை வளாகத்தில் நிறுவுவது, மிகவும் பொருத்தமுடையதாகும். தமிழகத்தின் வரலாற்றில், அவரது பெயரும், புகழும், என்றென்றும் நிரந்தரமாகத், தழைத்தோங்கும் என்பதில் ஐயமில்லை. அவர் விட்டுச் சென்ற பணிகளை, அதே உள்ளார்ந்த ஈடுபாட்டுடன், செயல்படுத்தி வருகின்ற அவரது புதல்வர், டாக்டர் M.A.M.ராமசாமி அவர்களுக்கும், என் மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திருவுருவச் சிலையைக் காண்பவர்களுக்கு, அதன் பின்னால் ஒரு மாபெரும் சரித்திரம் மறைந்து இருப்பது, நிச்சயமாக நினைவிற்கு வரும் என்று கருதுகிறேன். தனிப்பட்ட மனிதர்களைவிட, ஒட்டுமொத்த சமுதாய வளர்ச்சிதான் முக்கியம் என்ற உணர்வு, இயற்கையாக அவர்கள் மனதில் எழும் என்று நம்புகிறேன்.



நம்முடைய அறிவு வளர வேண்டுமானால், முதலில் நம்முடைய மனத்தை ஒருமுகப் படுத்த வேண்டும்.

–சுவாமி விவேகானந்தர்

# கல்விக் கொள்கையே உயிர்க் கொள்கை!



கல்வி கற்பிப்பது என்பது வெறும் அறிவைப் பெற்று ஆங்காங்கே காணப்படும் செய்திகளை, தகவல்களைச் சேகரிப்பது என்ற எல்லையில் வெறுமனே முடிந்து விடுவது அல்ல. வாழ்க்கையின் முதன்மையை, முழுமையை முழுவதுமாக உணர்ந்து கொண்டு, சிறந்த மனிதனாக மாறுவதற்கு நல்ல பயிற்சியை வழங்குவதுதான் கல்வி என்று நாம் கருத வேண்டும். அந்த வகையில் வாழ்வின் அனுபவமே ஒருவகையில் நாம் கற்கும் கல்வி என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

வாழ்க்கை அனுபவம் இல்லாத எவரும் கல்வி கற்றவராக முடியாது என்று அறிஞர் பெர்னாட்ஷா குறிப்பிட்டதை நான் தற்போது நினைவுகூர விரும்புகிறேன். மனிதனை நல்ல வாழ்க்கையை நோக்கி அழைத்துச் செல்வதோடு, அவனை மனிதாபிமானம், மிக்கவனாகவும், பண்புடையவனாகவும் மாற்றுவது தான் கல்வியின் நோக்கம்.

கல்வி வெறும் ஏட்டுச்சுரைக்காயாக இருந்த காலம் மாறி இப்போது சமுதாய மாற்றத்திற்கு உதவும் மாபெரும் சக்தியாக விளங்கி வருகிறது. கல்வி தான் எத்தனையோ நாடுகளில் பெண்களின் அடிமைத் தனத்தை ஒழிக்கும் ஆயுதமாகச் செயல்பட்டு இருக்கிறது. வீட்டுக்கு உள்ளே பூட்டி வைக்கப்பட்டிருந்த பெண்களையும், அடுப்பறைக்குள்ளேயே உழன்று கொண்டிருந்த மகளிரையும் கல்விதான் அகில உலகப் புகழ்பெற வைத்துள்ளது. மேலும் மற்ற நாட்டவர்கள் விரும்பி அழைத்து மரியாதை தருகிற பட்டியலில் முதலிடம் வகிப்பது அறிவார்ந்த கல்வியே ஆகும்.

ஓர் அரசுக்கு அதனுடைய கல்விக் கொள்கையே அதன் உயிர்க் கொள்கையாகக் கருதப்படுகிறது. தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களால் வகுக்கப்பட்ட 'இரு மொழிக் கல்வித் திட்டம்', புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உரிய முறையில் கடைப்பிடிக்கப்பட்டு நமது மாநிலக் கல்வித் துறையின் பற்றுக்கோடாக விளங்கி வருகிறது. அதே இரு மொழிக் கொள்கைத் திட்டத்தை எங்கள் அரசு முழுமையாகச் செயல்படுத்தும்.

*-'புரட்சித்தலைவியின் முழக்கம்' தொகுதி-1-லிருந்து*

---

அத்தகைய நல்லவரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்ததில், என் மனம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றது.

உச்ச நீதிமன்ற நீதிபதி, திரு. எஸ். மோகன் அவர்கள், சற்று முன்பு பேசும்போது, ரிப்பன் மாளிகைக்கு அருகில் உள்ள சாலை ஒன்றுக்கு சென்னையின் முக்கியச் சாலை ஒன்றுக்கு, ராஜா முத்தையா செட்டியார் அவர்களின் நினைவாக, அவரது பெயரைச் சூட்ட வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை, என் முன் வைத்தார்கள். அவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, ரிப்பன் மாளிகைக்கு அடுத்துள்ள "Sydenhams சாலை", பெயர் மாற்றம் செய்யப்பட்டு, ராஜா முத்தையா செட்டியார் அவர்களின் நினைவாக "ராஜா முத்தையா சாலை" என்று இன்று முதல் அழைக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், நீதிபதி மாண்புமிகு திரு. மோகன் அவர்களது வேண்டுகோளின்படி, டாக்டர் முத்தையா செட்டியாரின் வாழ்க்கை வரலாறு பாடநூலில் பாடமாகச் சேர்க்கப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு நீதிபதி அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப, சென்னை மாநகரம் விரைவில் சிங்காரச் சென்னையாக எழிலார்ந்த சென்னையாக மாறும் என்று உறுதி கூற விரும்புகிறேன். "எழில்மிகு சென்னை 2000" என்னும் சென்னையை அழகுபடுத்தும் மாபெரும் திட்டம் இப்போது நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த விழாவில் கலந்து கொள்ள, பெருந்திரளாக வந்துள்ள உங்கள் அனைவருக்கும், எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

# தமிழ்நாட்டில் புயல்-மழை



## நிவாரணப் பணிகள்: மாண்புமிகு முதலமைச்சர் ஆணை

சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகள் 31.10.94 அன்று சென்னையைக் கடந்த பெரும் புயலாலும், பேய் மழையாலும் பெரும் சீர் குலைவுக்கு ஆளாக நேர்ந்துவிட்டது. மக்கள் கடுமையான சூறாவளிப் புயல் காற்றாலும், பலத்த மழையினாலும் பாதிக்கப்பட்டுள்ளதை அறிந்தவுடன், தேவையான அனைத்து நிவாரணப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டுமென, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மதுரையிலிருந்து, தலைமைச் செயலாளருக்கும், மற்றும் அலுவலர்களுக்கும் ஆணையிட்டார்.

மறுநாள் 31.10.94-ல் இதன் காரணமாகச் சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் உள்ள பள்ளிகள்- கல்லூரிகளுக்கு அரசு விடுமுறை அறிவிக்கப்பட்டது.

பலத்த காற்று மற்றும் மழையினால் விழுந்து விட்ட மரங்களை உடனடியாக அப்புறப்படுத்தி, சாலைகளில் போக்குவரத்தைச் சரி செய்யவும், மழை நீர் தேங்கியுள்ள பகுதிகளிலிருந்து, அந்த நீரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவும், பள்ளமான பகுதிகளில் வசிக்கின்ற மக்களைப் பாதுகாப்பான பகுதிகளுக்கு அழைத்துச் சென்று, அவர்களுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்க ஏற்பாடு செய்யவும், மாநகராட்சி அதிகாரிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்.

மேலும், தூத்துக்குடியில் நிகழ்ச்சி முடிந்தவுடன் நேராகச் சென்னை திரும்பிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளரிடம் நிவாரணப் பணிகள் குறித்து கேட்டார்.

பின்னர், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் - மீனளத் துறை அமைச்சர் ஆகியோரை ஒவ்வொரு பகுதிக்கும் சென்று, பலத்த காற்றாலும், மழையாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற நிவாரணப் பணிகளை மேற்பார்வையிடுமாறு அனுப்பி வைத்தார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், விமான நிலையத்திலிருந்து கிளம்பி, அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளைப் பார்வையிடுவதற்கு விரைந்து சென்றார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின் பேரில் பாதுகாப்பான பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்ட மக்களுக்கு சென்னை மாநகராட்சி 4 இடங்களில் சமையல் கூடங்களை ஏற்படுத்தி, உணவு சமைத்து வழங்கியது.

கடும் புயல்/மழை மற்றும் பலத்த காற்றினால் சில இடங்களில் ஏற்பட்டுள்ள சம்பவங்களினால் மரணம் அடைந்த 15 பேரின் குடும்பத்தினருக்கு, தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அந்தக் குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகையாக, தலா 10,000 ரூபாய் வழங்குவதற்கும் ஆணையிட்டார்.






# காவல்துறை கைரேகைப் பதிவு மேம்பட, நவீன தொழில் நுட்பத்தோடு புதிய பிரிவு!

## காவல்துறைத் தலைமை அலுவலகக் கட்டடக் கால்கோள் விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

**கா**வல்துறை என் வசம் இருக்கிறது என்பது மட்டுமல்ல, அது என்னுடைய எண்ணத்தில் முன்னுரிமை கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

பொது நிர்வாகத்துறையில் மிகவும் சிக்கலான, கடினமான பணியை மேற்கொள்கிறார்கள் என்பதை நான் தெளிவாக அறிவேன்.

பாதுகாப்புப் பணி மற்றும் ஒழுங்கைப் பராமரிக்கும்போது, போலீசார் பிரமமாண்டமான முயற்சிகளையும் சங்கடங்களையும் மேற்கொண்டு வருகிறார்கள், அதே நேரத்தில் அவர்கள் மக்களின் விமர்சனத்துக்கும் ஆளாகிறார்கள்.

எல்லாத் துறைகளிலும் 'கறுப்பு ஆடுகள்' இருப்பதைப் போல, காவல்துறையிலும் இருக்கிறார்கள். கறுப்பு ஆடுகளை தனிமைப்படுத்த வேண்டும்.

அதற்காக ஏற்கெனவே இருக்கும் வெள்ளை ஆடுகளை எல்லாம் கறுப்பு மை கொண்டு கறுப்பு ஆக்க வேண்டும் என்பது அர்த்தமல்ல, எங்களது நோக்கம் தவறுகளைத் திருத்த வேண்டும் என்பதுதான்.

நான் பதவிப் பொறுப்பு ஏற்ற பிறகு, காவல்துறையில் பற்றாக்குறையை நிவர்த்திக்க ஏராளமான புதிய இடங்கள் ஏற்படுத்தப்பட்டன.

காவல்துறை தேர்வுக்கான நடைமுறைகள் சீரமைக்கப்பட்டன. எல்லா மட்டத்திலும் பதவி உயர்வுக்கான வாய்ப்பு அளிக்கப்பட்டது. காவல்துறையினரின் வீட்டு வசதிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

மகளிர் பிரச்சினைக்குத் தீர்வு காண, மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

காவல்துறையில் நவீன தொழில் நுட்பத்தைப் புகுத்த நாம் மேற்கொண்டுள்ள முயற்சிகளின் அடையாளமே இன்றையதினம் நடைபெறும் இந்த விழா. தகவல், தொடர்புச் சாதனங்களும், கணிப்பொறிகளும் இந்தத் துறையில் நவீன தொழில்நுட்பச் சாதனங்களாகும்.

காவல்துறைக்கு மட்டுமல்லாமல், புதிய சமுதாயத்துக்கே தகவல் தொடர்புச் சாதனங்கள் உயிர்நாடியாக உள்ளன. "போலீஸ் டிஜிட்டல் மைக்ரோவேவ்" திட்டம் காவல்துறையின் பணியில் முதல் தரமான நவீன தொழில் நுட்ப வசதியாகும்.

தமிழகக் காவல்துறையினருக்குக் குறிப்பாக ரேடியோ அதிகாரி மற்றும் அவரது குழுவினருக்கு இது பெருமை சேர்ப்பதாகும்.

இந்த நவீன தகவல் தொடர்புச் சாதனம்



**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், காவல்துறைத் தலைமை அலுவலக வளாகத்தில் நடைபெற்ற விழாவிற்கு வருகை புரிந்தபோது, தமிழ்நாடு சிறப்புக் காவல் துறையினரின் (Tamil Nadu Special Police) அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார் (24.10.94).**





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சென்னையில் காவல்துறை இயக்குநர் அலுவலக வளாகத்தில் காவல்துறை நவீனமயமாக்குதல் தொடர்பான கம்ப்யூட்டர் திட்டத்தை, காவல்துறை ஆலோசகர் திரு என். கிருஷ்ணசாமி விளக்குவதைப் பார்வையிட்டார் ***(24.10.94).***

காவல்துறையினர் எந்த இடத்தில் இருந்தாலும் அவர்களுடன் தகவல் தொடர்பு ஏற்படுத்திட வசதி செய்கிறது.

கணிப்பொறிகளும், தகவல் தொடர்புச் சாதனங்களும் காவல்துறையினருக்கு அவசியம். இந்த நிலையில் எல்லாக் காவல் நிலையங்களுக்கும் ரேடியோ தகவல் தொடர்புச் சாதங்களை விரைவாக விநியோகம் செய்ய நான் தயக்கம் காட்ட மாட்டேன்.

நவீன தகவல் தொடர்புச் சாதனங்களை ஏற்றுச் செயல்படுத்திட உரிய ஏற்பாடுகள்

சந்தன மரக் கடத்தல் வீரப்பன் கும்பலால் கொல்லப்பட்ட காவல்துறை உதவி ஆய்வாளர் திரு செந்தில்குமார் அவர்களது மனைவி திருமதி லதா அவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழா மேடையில், அரசுத் தரப்பில் நிவாரண நிதித் தொகையாக ரூ.10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையும், சிறப்புக் காவல்படைப் பிரிவுக் காவலர்கள் தன்னிச்சையாக வழங்கிய நிதி உதவியான ரூபாய் ஒரு இலட்ச ரூபாய்க்கான காசோலையையும் சேர்த்து மொத்தம் ரூ.11 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கினார் ***(24.10.94).***





## தாயன்போடு அணுகும் மகளிர் காவலர்கள்!

**தா**யின் அன்பை உணராதோர் உலகில் இல்லை. அந்த அன்பு எதனுடனும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத உயர்ந்த ஒன்றாகும். தவறு செய்யும் குழந்தைகளைத், தாயன்பால் நிச்சயமாகத் திருத்த முடியும் என்பதை நாம் அறிவோம்.

அவ்வாறே மகளிர் காவலர்களின் கடந்த காலப் பணிகளை உற்று நோக்கினால், குற்றவாளிகளின் மன மாற்றத்திற்கு, அவர்களின் அணுகுமுறை பேருதவியாக இருந்து வருவது தெரியவரும்.

பெரும்பாலும் இளங் குற்றவாளிகளும், முதல்முறையாகக் குற்றம் புரிவோர்கள் பலரும், அவர்கள் செய்துவிட்ட குற்றத்தினை எண்ணி வருந்தும் நிலையிலேயே இருப்பார்கள். அந்த மனநிலையில் உள்ளோரை, மீண்டும் தவறு செய்யாமல் நிரந்தரமாகத் தடுத்தாட் கொள்ளும் திறமை, மகளிர் காவலர்களிடையே உள்ளது. இதுபோன்ற குற்றவாளிகளைத் தாயன்போடு அணுகி, கண்டிக்க வேண்டியவற்றைக் கண்டித்தும், அன்பு காட்டித் திருத்த வேண்டிய குறைபாடுகளைத் திருத்தும் கைவண்ணம், பொதுவாக மகளிர் காவலர்களிடம் இருக்கின்றது.

–'புரட்சித்தலைவியின் முழக்கம்' தொகுதி-1லிருந்து

செய்வது முக்கியம். இதற்காக 160 போலீஸ் கண்காணிப்பாளர்கள் மற்றும் அதற்கும் உயர்ந்த பதவிகளில் இருப்பவர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்படும்.

கணிப்பொறிகளைப் பயன்படுத்துவது படிப்படியாக ஒவ்வொரு காவல் நிலையத்துக்கும் எட்ட வேண்டும் என்பதே எனது விருப்பம். இதனால் காவல் நிலையங்களில் எழுத்து வேலைகளின் சுமை குறையும்.

காவல்துறைப் பயிற்சிக் கல்லூரிகளிலும் கணிப்பொறி வசதிகள் செய்து தருவதன் மூலம் காவல் நிலையங்களில் கணிப்பொறி களில் பயிற்சியும் ஏற்படும். இந்த 2 திட்டங்களின் தொடக்க விழா உண்மை யிலேயே இந்தியாவில் காவல்துறை வர லாற்றில் ஒரு மைல் கல்லாகும்.

தமிழ்நாடு காவல்துறையில் செயல்படும் கைரேகைப் பதிவு இந்தியாவிலேயே சிறந்த நிறுவனமாகச் செயல்படுகிறது என்பதைக் கேள்விப்பட்ட நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தத் துறை மூலம் பல குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு இருக் கின்றன.

இப்போது கைரேகைப் பிரிவு மேலும் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காக நவீன தொழில்நுட்பத்துடன் இங்கே புதிய பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

''எலக்ட்ரானிக் கார்ப்பரேசன் ஆப் இந்தியா'' நிறுவனம், பணம் எதுவும் வாங்காமல் ஓராண்டுக் காலத்துக்கு இந்தப் புதிய பிரிவை ('அங்குலி புராஜக்ட்') ஏற்படுத்தித்தந்துள்ளதைப் பாராட்டுகிறேன்.

மற்ற பொதுத்துறை நிறுவனங்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழும் வகையில் இந்த நிறுவனம் காவல்துறைக்கு உதவி செய்ய முன்வந்துள்ளது வரவேற்கத்தக்கது.

இந்தப் புதிய பிரிவு தொடங்குவதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கிய கிருஷ்ணமூர்த்தி அயராது பாடுபட்டு இருக் கிறார். அவருக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு காவல்துறையை நவீனப்படுத்து வதற்கு உங்கள் ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியம் தேவை. உங்கள் ஆதரவு இல் லாமல், இதில் வெற்றி பெறமுடியாது. அந்த வகையில் தமிழ்நாடு போலீஸ் 'டி.ஜி.பி.' ஸ்ரீபால், அவ்வப்போது நல்ல ஆலோசனை களையும், பல்வேறு புதிய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும் தெரிவித்து வருகிறார். காவல்துறை முன்னேற்றத்திற்கு இவை மிகவும் உதவியாக உள்ளது. இதற்காக அவரை மனமாரப் பாராட்டுகிறேன். தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டு வதோடு, குற்றங்களைக் கண்டுபிடித்து சமுதாயத்தையும் பாதுகாத்து வருகிறார்கள். இதற்காகப் போலீஸ் 'டி.ஜி.பி'யையும் மற்ற உயர் போலீஸ் அதிகாரிகளையும் அனைத் துத் தரப்பினரையும் பாராட்டுவதோடு என் நன்றியையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

தமிழ்நாடு காவல்துறை மேலும் சிறப்பாகப் பணியாற்றி – நமது தமிழகக் காவல்துறை உலகிலேயே சிறந்த காவல்துறையாகத் திகழவேண்டும் என்ற என் கனவை நனவாக்க வேண்டும்.

சிறு சேமிப்பு - உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

## செழிப்பான வாழ்விற்கு
## இன்றே முதலீடு செய்வீர்

# கிசான் விகாஸ் பத்திரம்

**உங்கள் முதலீடு 5½ ஆண்டுகளில் இருமடங்கு வளர்கிறது.**

### சிறப்பு அம்சங்கள்

- ஐந்தரை ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது.
- 18.18% சாதாரண வட்டி.
- பத்திரங்கள் ரூ.100/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/-, ரூ.10,000/- மதிப்புகளில் கிடைக்கின்றன.
- அவசரத் தேவைக்கு 2½ ஆண்டுகளில் வட்டியுடன் பணம் திரும்பப்பெற வசதி.

**ரூ.1000/- முதலீட்டிற்கு கிடைக்கும் தொகை**

| ஆண்டுகள் | தொகை |
|---|---|
| 2½ ஆண்டுகளில் | ரூ.1,310/- |
| 3 ஆண்டுகளில் | ரூ.1,420/- |
| 3½ ஆண்டுகளில் | ரூ.1,500/- |
| 4 ஆண்டுகளில் | ரூ.1,620/- |
| 4½ ஆண்டுகளில் | ரூ.1,730/- |
| 5 ஆண்டுகளில் | ரூ.1,860/- |
| 5½ ஆண்டுகளில் | ரூ.2000/- |

1.4.1994 முதல் தமிழ்நாட்டில் செய்யப்படும் முதலீட்டிற்கு

**2%**

சிறப்பு ஊக்கத்தொகை.





தமிழ்நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு இல்வச பரிசுக் கூப்பன் பெற்று, கவர்ச்சிகரமான மாருதி ஆம்னிவேன் அல்லது டிராக்டர் (இயந்திரக் கலப்பையுடன்) உட்பட 619 பரிசுகளை வெல்ல வாய்ப்பு.

மேலும் விவரங்களுக்கு

**ஆணையர்,**

சென்னை மாநகராட்சி (சி.சே.பரிவு), சென்னை-3,
தொலைபேசி: 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2.,
தொலைபேசி: 849962

மாவட்ட ஆட்சியாளர்களி, வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

***இயக்குநர், சிறு சேமிப்புத் துறை***

*சயர் மேன்ஷன், 621, அண்ணா சாலை,*
*சென்னை - 600 006.*
*தொலைபேசி: 8251784/8251685.*

DIPR/519/DIS/94

*சிறு குடும்பம் செல்வக் குடும்பம்*

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி வெளியிடப்படும் கட்டுரை:

# தமிழ் பயிற்று மொழியாக வேண்டும்

## -தவத்திரு குன்றக்குடி அடிகளார்

தமிழ், காலத்தால் மூத்த மொழி வளர்ந்த மொழி. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கணம் கண்ட மொழி. இலக்கியத் திற்கும் பின்தான் இலக்கணம் தோன்றும். தமிழின் இலக்கண வரம்பும், எளிமையும், இனிமையும், தமிழின் தொன்மைக்குச் சான்று. தமிழ், காலந்தோறும் அவ்வக் காலத்துக்குரிய இலக்கியங்களைப் பெற்று, வளர்ந்த மொழி, தமிழிலக்கியங்கள் புலமையின் விளைவு மட்டுமல்ல. காலத்தின் தாக்கமும் அந்த இலக்கியப் படைப்புகளுக்கு ஒரு காரணம். தமிழிலக்கியங்கள் வாழ்க்கை யில் தோன்றியவை; வாழ்க்கையை உருவாக் கியவை.

நமது முன்னோக்கள் சங்கம் வைத்து மொழி வளர்த்தனர். பழந்தமிழ்ச் சங்கம் பிரெஞ்சு தேசத்து அகாடமி French Academy போல உரிமையும் வலிமையும் உள்ளதாக மொழித் துறையில் மேலாண்மை பெற்றிருந்தது. தமிழில் ஒரு நூல் தோன்றினால் தமிழ்ச் சங்கத்தின் அங்கீகாரம் பெற்றால்தான் அது நூல் என்று ஏற்கப்பெற்றது. இறையனாரின் “கொங்குதேர் வாழ்க்கை” எனத் தொடங்கும் பாடல் குற்றமுடையது என்று தமிழ்ச் சங்கம் சுட்டியதை நினைவுகூர்க. இடைக்காலத்தில் எல்லாம் போய்விட்டது! ஆரியம், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளின் குறுக்கீடுகள் தமிழ் வளர்ச்சியைப் பாதித்துள்ளன. தமிழர்களும் தமிழ் வளர்ச்சியென்றால் என்ன என்று புரிந்து கொள்ளாமலே தமிழை வழிபாட்டுக்குரியதாக்கிவிட்டனர்! இன்று தமிழர்கள் செய்வதெல்லாம் தமிழ்ப் பாதுகாப்பு முயற்சியே! அதுவும் கூட முழுமையாக இல்லை!

இந்த யுகம் விஞ்ஞான யுகம். ஆனால், தமிழ் இந்த யுகத்திற்கு ஏற்றவாறு வளர வில்லை.

“புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்!
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை”

என்று பாரதி எடுத்து மொழிந்து துய ருற்றான். இன்றுவரை பாரதி துயருற்ற நிலை மாறவில்லை. மாற்றுவதற்கு இங்கும் அங்குமாகச் சில முயற்சிகள் நடந்தன. ஆனால், வெற்றி பெறவில்லை. நாடு விடுதலை பெற்ற காலத்திலிருந்து தாய்

மொழி வளர்ச்சி- தமிழ் மொழி வளர்ச்சி, தாய்மொழி வழிக் கல்வி பற்றி ஓயாது பேசப்பெற்று வருகிறது. ஆனால், முயற்சி கைகூடவில்லை. தமிழ், முத்தமிழாகவே இருக்கிறது! நான்காவது தமிழ், ஐந்தாவது தமிழ் என்று தமிழின் துறைகள் வளர வில்லை. குறிப்பாக அறிவியல் தமிழ் வளரவில்லை.

தமிழ் அறிவியல் மொழி இல்லையா? பழந்தமிழில் அறிவியல் முத்துக்கள் இல் லையா? செடி, கொடி, தாவர இனங்களுக்கு உயிர் உண்டு என்று தொல்காப்பியம் கூறு கிறது. அவை ஓரறிவுயிர்கள் என்று கூறுகிறது. செடி, கொடி, தாவரங்களுக்கு உயிர் உண்டு என்று கண்டுபிடித்த கருத்து, தமிழில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய கருத்து. ஆனால், இன்று கற்றுத்தருவதோ சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த சர். ஜகதீச சந்திர போசு கண்டுபிடித்தார் என்பதாகும். ஏன் இந்த நிலை? தமிழர்கள் தங்கள் அறிவியற் கண்டுபிடிப்புகளைத் தொடர்ந்து ஆய்வு செய்யாததும் அனுபவத்திற்குக் கொண்டு வராததுமாகும். காந்தத்தின் ஈர்ப்பாற்றல் இரும்பை இழுக்கும் என்ற அறிவியல் உண்மையைத் திருவாசகம்,

“இரும்பு தரு மனத் தேனை
ஈர்த்து ஈர்த்து” (திரு ஏசறவு 1)

என்று கூறுகிறது.

மாணிக்கவாசகர் “அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்” என்று கி.பி. 9-ம் நூற்றாண்டிலேயே கூறியதன் மூலம் உலகம் உருண்டை என்கிறார். கம்பனின் இராம காதை முதலியன அணுவைப் பற்றிப் பேசுகின்றன. சித்தர்களின் நூல்களில்

உடலமைப்பு, உடலியல், மருத்துவ அறிவியல் பற்றிய செய்திகள் ஏராளமாக உள்ளன. ஆதலால், தமிழ், அறிவியல் சார்ந்த ஒரு மொழியேயாம். தமிழ்நாடு தன்னாட்சி இழந்தமையாலும் அந்நிய ஆட்சி மாறி மாறி தமிழ்நாட்டுக்கு வந்தமையாலும் தமிழ் வளர்ச்சி பாதிக்கப்பெற்றுள்ளது.

இன்று தமிழ் வளர்ச்சிக்கு அறிவியல் தமிழ் வளர்ச்சிக்குத் தடை ஒன்றும் இல்லை. நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டம் தாய்மொழி வளர்ச்சிக்கு உத்தரவாதம் அளிக்கிறது. உத்தரவாதம் அளிப்பதோடன்றி மைய அரசின் தேர்வாணை, தேர்வுகளை அவரவர் தாய்மொழியிலேயே எழுதலாம் என்று ஆணை பிறப்பித்து நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. பாராளுமன்றத்தில் தமிழில் பேசலாம், வினா கேட்கலாம். மைய அரசின் துறைகள் மாநிலத்தின் இயங்கும் துறைகள் தமிழில் இயங்க வேண்டும் என்பது ஆணை மட்டுமல்ல நடைமுறை. பணவிடைப் படிவம் தமிழில் இருக்கிறது. மேலும் மாநில மொழிகளின் வளர்ச்சிக்கு வேண்டிய நிதி உதவிகளையும் மைய அரசு வழங்குகிறது. மாநில அரசைப் பொருத்தவரையில் தமிழ் வளர்ச்சிக்குத் தடை இல்லை. மாறாக, "எதிலும் தமிழ், எங்கும் தமிழ்" என்பது தமிழக அரசின் கொள்கை கோட்பாடு.

அறிவு வளர, தாய் மொழி துணை செய்வதுபோல் பிற மொழி துணை செய்யாது. தாய் மொழியே சிந்தனைக்குரிய மொழி. ஒன்றைப் பரவலாக விரிவாக ஆய்வு செய்யத் துணை செய்வதும் தாய் மொழியே! தமிழ் வழிக் கல்வி, வற்றாத அறிவு ஊற்று. பிற மொழிக் கல்வி மனப்பாடம் மலைமீது







வீழ்ந்த மழையனையது. தமிழரின் அறிவு வளர்ச்சிக்குத் துணை செய்யாது. தமிழர் அறிவியலில் வளர்ந்தால்தான் தமிழ் வளரும். தமிழரும் தமிழும் வளர்ந்தால்தான் தமிழ்நாடு வளரும். ஆதலால் தமிழ்நாட்டில் தமிழ், துறைதோறும் பயிற்று மொழியாக இடம் பெறவேண்டும். ஆங்கிலம் ஒரு பாட மொழியாகக் கற்பிக்கப்பெறுதல் வேண்டும். தமிழ்துறைதோறும் பயிற்று மொழியாக அமைந்தால்தான் தமிழ் வளரும். தமிழ் அறிவியல் தமிழாக வளர்ந்து காலத்தை வென்று விளங்கும். பாரதிதாசன்,

"உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும்

ஒருத்தர் தடை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட

என்று பாடியது வெற்றி பெற வேண்டும்.

## முத்துக்கள்

மக்கள் ஒருமைப்பாட்டின் மறு உருவமாக விளங்குவது கூட்டுறவு. மக்களாட்சி மலர்ச்சியடையும் போது, கூட்டுறவு உணர்வும் மலர்ச்சி அடைகின்றது.

—பேறிஞர் அண்ணா

உண்மையே சொல் அது உன் வார்த்தையைப் பாதுகாக்கும். கலந்து யோசனை செய். அது உன் சிந்தனையை வளமாக்கும்.

—வள்ளலார்

உண்மையைக் குறிக்கோளாய்க் கொண்டு உழைப்பவர்களைத் துன்பம் ஒன்றும் செய்ய முடியாது.

—மகாவீரர்

நல்லவற்றையே பேசுங்கள். இல்லையேல் மௌனமாய் இருப்பது நல்லது.

. நபிகள் நாயகம்

# விளையும் பயிர்



சென்னை, கே.கே. நகர் ஸ்ரீகிருஷ்ண சாமி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், பதினொன்றாம் வகுப் பில் பயிலும் மாணவி செல்வி சோ. சிவமீனாட்சி ஆனந்தி.

இவர், ஆறாம் வகுப்பு முதலே பல பேச்சுப் போட்டிகளில் பங்கேற்று, பற்பல பரிசுகளைப் பெற்றுள்ளார்.

1991-92-ஆம் ஆண்டு ஸ்ரீராம் குரூப் நிறுவனத்தினர் நடத்திய மாநில அளவிலான பேச்சுப் போட்டியில் பங்கேற்று முதற்பரிசாக ரூ.2,500 யும், பள்ளிக்கு நிரந்தரமாக ஒரு கேடயத்தையும் பெற்றுத் தந்து உள்ளார்.

பொள்ளாச்சி மகாலிங்கம் அவர் களின் கீழ் இயங்கி வரும் பாரதியார் சங்கம் ஆண்டுதோறும் நடத்தும் பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் நான்கு ஆண்டு களாகத் தொடர்ந்து கலந்து நான்காண்டுகளும் பரிசு பெற் றுள்ளார். ஆவிச்சி மேனிலைப் பள்ளியினர் ஆண்டுதோறும் நடத் தும் ஏ.வி.எம். நினைவுச் சுழற் கோப்பைப் பேச்சுப் போட்டியில் மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து பேசி மூன்று முறையும் முதற் பரிசு பெற்றுள்ளார்.

அசோக் நகரில் உள்ள அருள் நெறி மன்றத்தினர் ஆண்டுதோறும் நடத்தும் பாரதியார் விழாப் பேச் சுப் போட்டிகளிலும் தொடர்ந்து மூன்றாண்டுகளாகக் கலந்து மூன்று முறையும் முதற் பரிசி னையே பெற்றுள்ளார். 1991-இல் அரசு நடத்திய குழந்தைகள் தின விழாப் பேச்சுப் போட்டியில் இரண்டாம் பரிசினையும் 1993-இல் அரசு நடத்திய காந்தியடிகளின் 125-வது பிறந்த நாள் விழாப் பேச்சுப் போட்டியில் முதலாவ தாக வந்து ரூ.100-க்கான அஞ்சலகச் சேமிப்புச் சான்றிதழினையும் பெற் றார். இவ்வாண்டும் ( 1994 ) அரசு நடத்திய காந்தியடிகளின் பிறந்த நாள் விழா பேச்சுப் போட்டியில் கலந்துகொண்டு வென்று பரிசு களை ஈட்டியுள்ளார்.

மேலும் பாவேந்தர் பாசறை, அம்பேத்கர் நூற்றாண்டு விழாக் குழுவினர், காந்தீய இளைஞர் அமைப்பினர், மையிலாப்பூர் அகாடமி, ஜவகர் வித்யாலயா, ராமகிருஷ்ண மிஷன் மேல்நிலைப் பள்ளி மையம் ஆகிய அமைப்புகள் நடத்திய பேச்சுப் போட்டிகளிலும் கலந்துகொண்டு வென்று பரிசு களை ஈட்டியுள்ளார்.

# உலகில்...

உலகிலே மிகப் பெரிய ஹோட்டல் உள்ள நகரம் பீகிங்.

உலகில் காப்பி அதிகம் விளையும் நாடு பிரேசில்.

உலகிலேயே மிக நீளமான பாலம் அமெரிக்காவின் மேற்கு வர்ஜீனியா மாநிலத்தில் உள்ள நியூரிவர் ஜார்ஜ் பாலம் ஆகும்.

உலகின் அதிகம் விற்பனை யாகும் பத்திரிக்கை ஜப்பானின் 'யோமிபுரி ஷிம்புன்' பத்திரிக்கை. உலகில் நீளமான பாதாள ரயில் பாதை லண்டனில் உள்ளது.

உலகிலேயே டாக்டர்கள் அதிக முள்ள நாடு - அமெரிக்கா. உலகிலேயே மியூசியங்கள் அதிக முள்ள நாடு அமெரிக்கா.

உலகின் மிகப்பெரிய விளை யாட்டு மைதானம் செக்கோஸ் லாவாகியாவில் உள்ள ஸ்ட்ரா ஹாவ் விளையாட்டு மைதானம்.

உலகத்திலுள்ள மிகப்பெரிய அருங்காட்சியகம் நியூயார்க் நகரிலுள்ள 'அமெரிக்கன் மியூ சியம் ஆப் நேச்சுரல் ஹிஸ்டரி' ஆகும்.

உலகிலேயே மிகப் பெரிய மலைச்சிகரம் எவரெஸ்ட். இதன் உயரம் 29,028 அடியாகும். உலகின் புகழ்பெற்ற அருவிகள் நயாகரா, விக்டோரியா, கலியா, கான்.

உலகில் ரப்பர் உற்பத்தியில் சிறந்து விளங்குவது - மலேசியா உலகில் தக்காளி அதிகம் உற் பத்தியாகும் நாடு அமெரிக்கா.



# தொழிலே தெய்வம்





—கவிஞர் வெ. சிவநேசன்

ஒரு தொழிலைக் கற்போம்—நாம்
உயர்ந்து வாழ்வில் நிற்போம்
அமரகவியின் வாக்கு—இதை
அறிந்து சோர்வைப் போக்கு!





தொழிலில் சிறுமை பெருமை—பெரும்
தோல்வி என்ப தில்லை
தூய்மை முயற்சி ஒன்றே—நமைத்
தூக்கி விடும் நன்றே!

உடலும் மனமும் உழைக்கும்—நல்ல
உண்மை உழைப்புக் கீடு
உலகில் வேறு ஏது—என்று
உரக்க நீயும் பாடு!



# அறிவுச் சுடர்

எளிதில் மின்கடத்தும் திறன் கொண்டது எது?
தாமிரம்

இரத்த ஓட்டத்தைக் கண்டு பிடித்தவர் யார்?
வில்லியம் ஹார்வே

மாலைக்கண்நோய் எதனால் ஏற்படுகிறது?
வைட்டமின் A குறைவு

ஆரஞ்சுப் பழத்தில் அதிகம் காணப்படுவது
வைட்டமின் சி

காகிதம் தயாரிக்க முக்கியப் பொருள்
செல்லுலோஸ்

ஆசிரியர் தினம் கொண்டாடப் படும் நாள்
செப்டம்பர் 5

பூமிதான இயக்கத்தைத் துவக்கியவர்
வினோபா பாவே

நோபல் பரிசு உருவாக்கிய நாடு
ஸ்வீடன்

ஒளியின் அளவை அளக்கப் பயன்படும் கருவி
போட்டோமீட்டர்

இந்தியாவின் மிகப் பெரிய அணை
பக்ராநங்கல்

இந்தியாவின் சிறிய யூனியன் பிரதேசம்
இலட்சத்தீவு

மலைவாழிடங்களின் அரசி
உதகமண்டலம்

ஜைன மதத்தை நிறுவியவர்
வர்த்தமான மகாவீரர்

மகாபாரதத்தை எழுதியவர்
வியாசர்

ஒரிஸாவின் தலைநகரம்
புவனேஸ்வர்

தென்னிந்தியாவின் அஜந்தா
சித்தன்ன வாசல்

பிரமிடுகள் அமைந்துள்ள நாடு
எகிப்து



# சேக்கிழார்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
பேராசிரியர் மற்றும் தலைவர்
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

**1995-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்களில், தஞ்சைத் தரணியில் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெறுவதையொட்டி, புலவர் பெரு மக்கள் குறித்த கட்டுரை இதழ்தோறும் இடம் பெறுகின்றது. அந்த வகையில், அன்னைத் தமிழுக்கு அணியாரம் சூட்டிய சேக்கிழார் குறித்த கட்டுரை இங்கே இடம் பெறுகின்றது.**

சேக்கிழார் பெருமான் இயற்றிய திருத்தொண்டர்புராணம் சைவத் திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாக இலங்கும் பெற்றியது! பல்சிறப்புக்களைப் பெற்றிலங்கும் பெரியபுராணத்தைப் பன்னிரண்டாம் திருமுறையாகக் கொண்ட பெருமையையுடையவர் நம்பியாண்டார் நம்பிகளாவர்.

சேக்கிழாருடைய இயற்பெயர் அருண்மொழித்தேவர் என்பதாகும். கல்வெட்டு இவருடைய பெயரை இராமதேவர் எனவும் குறிப்பிடுகிறது. புலியூர்க் கோட்டத்தைச் சேர்ந்த குன்றத்தூரில் திருஅவதாரம் செய்த சேக்கிழார் பெருமான்ன 'மாதேவடிகள்' எனவும் கல்வெட்டுகள் சிறப்பிக்கின்றன.

## சேக்கிழாரின் தொண்டு

சோழன் இரண்டாம் குலோத்துங்கனுக்கு முதல் அமைச்சராக விளங்கிய பெருமையுடையவர், அறுபத்து மூன்று அடியார்களின் வரலாற்றினைத் தம் காப்பியத்தில் வடித்துக் கொடுத்து இருக்கிறார். அவர் தம் வரலாற்றினையும், வாழ்க்கை நிகழ்ச்சியினையும் அறியத் தமிழகத்தின் பல இடங்களுக்கும், ஊர்களுக்கும், திருக்கோயில்களுக்கும் சென்று அரிய குறிப்புகளைத் திரட்டிய பெருமையினர். கல்வெட்டுகளையும் கூர்ந்து கவனித்து, செய்திகளைத் தம் நூலுள் பொன்னே போல் போற்றிப் பொதிந்துள்ளார். சான்றாக, "தத்தா நமரேகாண்" என்ற தொடர் முதலாம் இராசேந்திர சோழனின் தஞ்சை கல்வெட்டில் காணப்படுகின்றது. கல்வெட்டுத் தொடரை அப்படியே மெய்ப்பொருள்நாயனார் புராணத்தில் எடுத்தாண்டுள்ளார்.

எங்கும் நிறைந்த சிவபெருமான் குரு வடிவிலும், இலிங்க வடிவிலும், அடியார் வடிவிலும் வெளிப்படுவார். அம்மூன்று வடிவங்களையும், தனித்தனிப் பற்றுக் கோடாகக் கொண்டு வழிபட்டு முக்திப் பேரடைந்தவர்கள் நாயன்மார்கள் ஆவர். அச் சைவப் பெரியவர்களை வணங்கி வழிபட்டு அவர்தம் வரலாற்றினைத் தம் மாக் கதையில் விரித்துரைத்து, உலகெலாம் அறிவித்து முக்திப் பேரடைந்தவர் சேக்கிழார் பெருமான் ஆவார்.

மேன்மைகொள், சைவம் செய்த தவப் பயனாகச் சேக்கிழார் அவதரித்தார் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

அடியார்களின் செயல் நுட்பங்களை அறிந்து கூறிய சேக்கிழாரின் ஆற்றல் திறனை சிவஞான முனிவர், "வாக்கினால் சொல்லவல்ல பிரான்" எனப் புகழ்ந்து போற்றியுள்ளார். சான்றாக, திருக்குறிப்புத் தொண்டர் நாயனாரின் குலத்தொழிலை,

'குறித்த பொருள் ஒலித்துக்
கொடுப்பதற்குக் கொடு போந்து
வெறிந்தட நீர்த்துறையின்கண்
மாசெறிந்து மகப் புழக்கி'

என்று குறிப்பிட்ட குறிப்பினால் அறியலாகும்.

மாசெறிதல் - நீரில் தோய்த்துக் கல்லில் மோதல்.

## நூல் அரங்கேற்றமும் நூலின் சிறப்பும்

சேக்கிழாரின் நூல் நயச்சிறப்பினையும், நூல் அரங்கேற்றம் பற்றிய செய்திகளையும் வியந்து பாராட்டும் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள்

'ஒப்பரிய தொண்டர்தம்
அருமையும் பெருமையும்
உவக்கும் அவர்
அவர்செய்கையும்
உவமையில் லாச்செய்கை
நுட்பமும் திட்பமும்
உம்பர்கோன் அருள்தட்பமும்

தப்பரிய செந்தமிழ்த் தொடை
நடையும் அடையும்

தவப்பொருள் அணிசிறப்பும்
தமிழ்முறை அடங்குபல
மந்தணமும் வெள்ளிடைத்
தவிரும்வெற் பெனவிளங்க
வெப்பரிய முழுமதிக் குடைநிழற்
றனபாயன
மேயஅவை அகம் நயந்து
வியந்துமெய்ப் பாட்டினொடு
பாராட்டி மகிழமேல்
மேல்விரித் தருளிய பிரான்'

(- சேக்கிழார் பிள்ளைத்தமிழ், செங்கீரைப்பருவம், 3.)

-எனப் போற்றிச் சிறப்பித்துள்ளார்.

அநபாயன் காலத்தில் நூல் அரங்கேற்றம் செய்யப்பட்டதை 'அனபாயன் மேய அவயகம்' என்ற தொடரால் அறியலாம். அநபாயன் காலத்தே திருத்தொண்டர் புராணம் அரங்கேற்றம் செய்யப்பட்டமையைச் சேக்கிழாரும்,

'மேய இவ்வுரை கொண்டு
விரும்பும்

சேய வன்திருப் பேரும்
பலம்செய்ய

தூய பொன்னணி சோழன்நீ
குழிபார்

ஆய சீர்அந பாயன் அரசவை'

என மொழிகுவர்.

உமாபதி சிவனாரும் அரங்கேற்ற நிகழ்ச்சியினை,

'மருவுதிரு முறைசேர்ப்பார்
எழுதுவார் இருந்து
வாசிப்பார் பொருளுரைப்பார்
கேட்டிருப்பார் - மகிழ்ந்து
சிரமசைத்துக் கொண்டாடிக்

குதூகலிப்பார் சிரிப்பார்
தேனிப்பார் குன்றைமுனி
சேக்கிழார் செய்த
அரியதவத் தினை நினைப்பார்
அம்பலவர் முன்னாள்
அடி எடுத்துக் கொடுக்க இவர்
பாடினார் என்றுரைப்பார்
பெரியபுராணம் கேட்ட
வளர்பிரான் செவிக்கும்
பிடிக்குமோ இனிச்சிந்தா
மணிப்புரட் டென்றுரைப்பார்

-எனக் காட்டுகிறார்.

உமாபதி சிவாச்சாரியார் பாடிய 'சேக்கிழார் புராணம்' வாயிலாகச் சோழ மன்னன் பணித்ததற்கிணங்கச் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தை இயற்றினார் என்பது அறியத் தகும். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் சேக்கிழார் பெருமானை, "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட கவி வலவ' எனச் சிறப்பித்துப் போற்றுவர். இறைவனே சேக்கிழார் பெருமானுக்கு இந்நூலினைப் பாட "உலகமெலாம்" என்ற தொடரை அடியெடுத்துக் கொடுத்தார்.

## நூல் நுவலும் அருஞ் செய்திகள்

சேக்கிழார் பெருமான் நாயன்மார்களின் வாழ்வியலை விவரிக்கும் சமுதாய வரலாற்று ஆசிரியர் எனில் சாலப்பொருந்தும். நாயன்மார்கள் ஓர் ஊரினர் அல்லர்; ஒரு சாதியினர் அல்லர்; ஒரே தொழிலில் ஈடுபட்டவருமல்லர். பல்வேறு நாடும், ஊரும், சாதியும், தொழிலும் கொண்டு வாழ்ந்த பெருமக்கள் ஆவர். அம் மக்களின் வாழ்வியல் வரலாற்றினை விவரிக்கும் முகத்தான் தமிழ் மக்களின் வாழ்க்கை முறை பழக்க வழக்கம், அரசியல் நெறி, கல்வி முறை, கோவில்கள், கலைகள், நாடு, நகர், ஆறு, மலை, காடு, சோலைகள், போன்ற இன்னோரன்ன பல செய்திகளையும் தம் நூலில் நெறிப்பட எடுத்தியம்பியுள்ளார்.

## காணப்பெறாத செய்திகள்

பிற சைவத் திருமுறைகளிலும், நூல்களிலும் காணப்பெறாத செய்திகளைப் பெரியபுராணத்தில் காணலாம்; கண்டுகளிக்கலாம். திருநீலகண்டர், இளமையில் துறவு கொண்ட வரலாறும், சாக்கியர் காஞ்சியில் சிவனைப் பூசித்து முக்தி அடைந்த செய்தியும் சுந்தரர் சங்கிலியாரை மணம்புரிந்த செய்தியும் இத்திருத்தொண்டர் புராணத்திலன்றிப் பிற நூல்களில் காணப்படாதனவாகும்.

## காப்பிய நோக்கில் பெரியபுராணம்

பெரியபுராணத்தில் பெருங்காப்



பியத்திற்குரிய இலக்கணம் அமைய வில்லை எனக் குறிப்பிடுவர். ஆனால் காப்பிய நோக்கில் இந்நூலினை ஆராய்ந்த அறிஞர் பெருமக்கள் பலர், பெரியபுராணம் பெருங் காப்பியமே என நிறுவுகின்றனர். சுந்தரமூர்த்தி இப்பெருங்காப்பியத் தின் தன்னிகரில்லாத் தலைவ ராவார்.

தடுத்தாட் கொண்ட புராணத்தில் சேக்கிழார் பெருமான் அருளிய 'சைவ முதல் திருத்தொண்டர் தம்பிரான் தோழனார் நம்பி' என்ற தொடரில் வரும் 'திருத்தொண்டர்' என்ற பெயர் சுந்தரரைக் குறிக்கும் காப்பியத் தலைவனாகச் சுந்தர மூர்த்தி நாயனாரைக் கொண்டு, அவர் கதையில் காப்பியத்தைத் தொடங்கி, அந்நாயனாரின் கதை யில் காப்பியத்தை முடிக்கவும் செய்துள்ளார். சேக்கிழார் பெரு மான், சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கைலாயத்திலிருந்து மண்ணுல கில் பிறந்து, பெண்டிர் இருவரை மணந்து வாழ்ந்து திரும்பவும் திருக்கைலாயம் சென்று சேர்ந்தது வரை, கதையின் நிகழ்ச்சிகளைக் கதைக் கோப்பாகக் கொண்டு உள்ளார். குன்றத்தூரார், சுந்தர மூர்த்தி நாயனாரின் திருத் தொண்டத் தொகையில் விரிவாக்க மாக விளங்கும் பெரியபுராணத்துள் அவர் போற்றிய சருக்கப் பெயர், அடியாரின் முறைவைப்பு என எல்லா நெறிகளிலும் சுந்தரமூர்த்தி நாயனாரின் நூல் நெறிமுறைகளைப் பொன்னே போல் போற்றிய பெருமையர் சேக்கிழார் பெருமானா வார்.

எனவே, சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டர் புராணத்துள் தன் னிகரில்லாத் தலைவனாக விளங்கும் பான்மையர் ஆவர்.

"சுந்தரமூர்த்தி நாயனாரது முந்திய வரலாற்றைத் திருமலைச் சருக்கம் முதலிற் கூறுகின்றது. அப்பால், நாட்டுச் சிறப்பைக் கூறியபின், திருவாரூர் நகரச் சிறப்பினைக் கூறுகிறது. அதற்குச் சிறப்புக் கூறும் நோக்கத்தால் மனுச்சோழன் சரி தையை விளக்குகின்றார். இங்ஙனம் காப்பியத்திற்குரிய இரண்டும் நாட் டுச் சிறப்பும், நகரச்சிறப்பும் அமை கின்றன" என்பர்! சிவக் கவிமணி

> அனுபவம் ஒரு கடுமையான வாத்தியார். அது சோதனையைத் தந்த பிறகுதான் பாடத்தைப் போதிக்கிறது.
>
> பெர்னாட்ஷா

சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், "பெரியபுராணத்தைத் தனித்தனிப் பற்பல சரிதங்கள் கோத்த கோவை என்று சிலர் கருதுகிறார்கள், அது தவறு. பெரிய புராணமானது தொடர்நிலைச் செய் யுளாய் ஒரு பழஞ்சரிதத்தைச் சொல் வதாய் ஒரு பெரிய உள்ளீடாகிய கற்பனையை எடுத்துக்காட்டுவ தாயுள்ள ஒரு பெருங்காப்பிய மேயாகும்" என்று நிறுவுகின்றார்.

## பெரியபுராணமும் அடியார்களின் இயல்பும்

தேவாரம் பாடிய மூவர் உள்ளிட்ட அறுபத்து மூன்று அடியவர்களின் வரலாற்றினைப் படித்துக் கொடுக் கும் தகைமைச் சான்றாகப் பெரிய புராணம் விளங்குகின்றது. அவ் வடியார் பெருமக்களின் இயல்பு களை,

'கேடும் ஆக்கமும் கெட்ட
திருவினர்
ஓடும் செம்பொனும் ஒக்கவே
நோக்குவர்
கூடும் அன்பினில் கும்பிடவே
அன்றி
வீடும் வேண்டா விறலின்
விளங்கினார்'

(திருக்கூட்டச் சிறப்பு 20)

-எனப் போற்றிப் புகழ்வர் சேக் கிழார் பெருமான். தாம் இயற்றிய பெரியபுராணத்திற்குச் சேக்கிழார் இட்ட பெயர் "திருத்தொண்டர் புராணம்" என்பதாகும். ஒப்பறி தொண்டர்களின் அருமை பெருமை களைப் பாடியமையால் "தொண்டர் சீர் பரவுவார்." என வழங்கப்படு கின்றார்.

நாயன்மார்களின் சைவ வாழ்வின் பெருமைகளையும் தோற்றப் பொலி வினையும்,

'பெருமையால் தம்மை ஒப்பார்
பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
ஊனமேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார்
அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார்
இவரையும் நீ அடைவாய்'

-எனப்பெருமித வாழ்வின் பெற்றி யினைப் பக்திப் பெருக்கின் மேலீட் டால் போற்றிப் பரவசம் அடை கின்றார், சைவ குலம் தழைத் தோங்கத் தோன்றிய குன்றத்தூர்ப் பெருமகனார்.

## பக்திச்சுவை

சேக்கிழார் பெருமானின் பெரிய புராணத்தில் பக்திச் சுவை மேலோங்கி இருக்கக் காணலாம். சேக்கிழார் பக்திநெறிப்பட்ட தம் மனப்பாங்கினை ஆங்காங்கு வெளிப்படுத்திச் செல்கிறார்.

கயிலை மலையைக் காண்கிறார் செந்தமிழ்ப்புலவர் சேக்கிழார். 'புண் ணியந்திரண்டுள்ளது போல்வது' கயிலைமலை என்கிறார்.

'அண்ணல்பா கத்தையா ளுடைய
நாயகி
உண்டுணெகிழ் கருணையின்
ஒழுக்கம் போன்றது'

(திருநாட்டுச்சிறப்பு 6)

-காவிரி என்று பாடுகின்றார். வயலில் நெற்கதிர்கள் முற்றி விளைந்து சாய்ந்திருக்கும் காட்சிகள் சேக்கிழாருக்குச் சிவனடியார்கள் பத்திமை நெறி நின்று தலையினால் வணங்குதல் போன்ற தோற்றத்தை அளிக்கின்றதாம்,

'பத்தியின் பால ராகிப் பரமனுக்
கானாம் அன்பர்
தத்தமில் கூடி னார்கள்
தலையினால் வணங்குமாபோல்
மொய்த்தநீள் பத்தியின் பால்
முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல
விளைந்தன சாலி யெல்லாம்'

(திருநாட்டுச்சிறப்பு 22)

தேவாசிரிய மண்டபத்தின் சிறப்பினைப் புகல வந்த சேக்கிழார் துன்பந் தீர்க்கும் சிவனடியார்கள் மேனியிற் பொலியும் திருநீறு போல் தூயதாகவும் அவர்கள் 'சிவாய நம' என எஞ்ஞான்றும் ஓசை யெழுப்புதலினால் ஆயிரம் பாற்கடல் போல் விளங்குவதாகவும் தேவாசிரியர் மண்டபத்தைக் காண்கிறார். பாற்கடலின் வெண்மைக்கு அடியார் மேனி முழுதும் பூசிய திருநீறும், பாற்கடலில் எழும் அலை ஓசைக்குச் சிவனடியார்களின் 'சிவசிவ' ஒலியும் உவமைகளாம்.

'அரந்தை தீர்க்கும் அடியவர்
மேனியில்
நிரந்த நீற்றொளி யால் நிறை
தூய்மையால்
பரந்த அஞ்செழுத் தோசை
பொலிதலால்
பரந்த ஆயிரம் பாற்கடல்
போல்வது'

(திருகூட்டச் சிறப்பு 3)

மாலையில் மேற்றிசையில் மாணிக்கச் சுடராம் கதிரவன் மறைவதும், இருள் வருவதும் உலகியல் இயல்பாக நடக்கும் நிகழ்ச்சியாகும்.

கதிரவன் ஒளி மறைந்த பின்னர் வானம் இருண்ட செயலைச் சேக்கிழார் பெருமான், சிவபெருமானின் அஞ்செழுத்தாய் பஞ்சாக்கரத்தை உணர முடியாத அறிவிலார் நெஞ்சம் எவ்வாறு இரண்டு கிடக்குமோ அதுபோன்ற நீண்ட வானம் இருண்டது என்று குறிப்பிட்டுள்ளார்.

'பரன், அஞ்செழுத்தும் உணரா
அறிவிலோர்
நெஞ்சும் அன்ன இருண்டது
நீண்டவான்
(தடுத்தாட்கொண்ட புராணம்: 159)

கங்குலாகிய நங்கை முன்கொண்ட புன்முறுவல் போலும், வெண்ணீற்றின் பேரொளி போன்றும் நிலா முகிழ்த்தது என்பர் சேக்கிழார்.

'நறுமலர்க் கங்குல் கங்கைமுன்
கொண்ட
முறுவ லென்ன முகிழ்த்தது
வெண்நிலா'

(தடுத்தாட்கொண்டபுராணம்: 160)

'அற்ற அண்ணுடம லாம்
பரந்தண்ணல் வெண்
நீற்றின் பேரொளி போன்றது
நீள்நிலா'

(தடுத்தாட்கொண்டபுராணம்: 162)

இதுபோன்றே கயிலை மலையைக் காணும் சேக்கிழார் பெருமான் கண்களுக்கு அம்மலை "பொன்னின் வெண்திருநீறு புனைந்தது போன்று நீள்பணி பூசிய மால்வரை"யாகக் காட்சி தரக் காணலாம். நீற்றொளியின் வெண்மை, பகல் போல் துலங்குவததாகக் குறிப்பிடுகின்றார் சேக்கிழார்.

'கிளர்ந்த திருநீற் றொளியிற்
கெழுமிய நண்பகல்'

(திருஞானசம்பந்த புராணம் 6)

இவற்றா லெல்லாம் சேக்கிழார் பெருமான் எப்பொருளைக் காணினும் அப்பொருளைச் சிவபெருமானோடும் அல்லது அவரோடு தொடர்புடைய பொருளாகவும் காண்கிறார் என்பது புலனாகும். இவற்றால் பத்தி நெறியின் தலைப்பட்ட சேக்கிழார் பெருமானின் மனப்பண்பு தெள்ளிதின் விளங்கும்.

## காவியச்சுவை

பத்தி நெறியினைப் பாடவந்த சேக்கிழார் தந்த காப்பியம் காவியச் சுவை நிறைந்து மிளிர்கின்றது. இயற்கை வருணனையும், சொல்லாட்சியும், உவமை அழகும், அணிநலன்களும் ஆங்காங்கே அமைவுறப் பொருந்திக் காவியச் சுவையினைக் கூட்டுவிக்கக் காணலாம். மருத நிலத்தை வருணிக்கும் போது வயல் வளம் சூழந்த நாடு நம் கண் முன் நிற்கக் காணலாம்.

'சங்கங்கள் வயலெங்குஞ்
சாலிகூழைக் கரும்பெங்கும்
கொருகெங்கு நிறைகமலக்
குளிர்வாகத் தடமெங்கும்
அங்கங்கே யுழவர்குழா மார்க்கின்ற
வொலியெங்கும்
எங்கெங்கு மலர்ப்படுக
ரிவைகழிய வெழுந்தருளி'

(திருஞான புராணம் 626)

'வங்கினைப் பற்றிப் போதா வல்லுடும் பென்ன நீங்கான்' என்று கண்ணப்பு நாயனார் புராணத்தில் இவர் கையாளும் உவமைத் தன்மை நாவிற் சிறப்பும், வேடர்களுக்குள் நிகழும் பேச்சுத்தன்மையிலேயே அவரறி பொருளை உவமையாகக் காட்டியிருப்பதும் இவர் நுண்மான் மதி நலத்தினை நுவலா நிற்கும். "பிள்ளைதைவரப் பெருகுபால் சொரிமுலைத்தாய்போல்" என்று இவர் பிறிதொரிடத்திற் கையாளும் உவமை, எடுத்த பொருளின் சிறப்பினை ஏற்றமுற வடிக்கும் திறமும் செஞ்சொற்களை வழங்கி நிற்கும் சொல்லழகும் உணர்த்துவதாகும்.

சோலையை வருணிக்கும் போது,

'மொய்யொளி சூழ்நிரை நீல
முதுவலயங்களின் அலையச்
செய்யதளிர் நறுவிரலில்
செடுமுகையின் நகஞ் சிறப்ப
மெய்யொளியின் நிழற்காணும்
ஆடியென வெண்மதியை
வையமகள் கையணைத்தாற்
போலுயர்வ
மலர்க்கோவை'

(திருநாவு புராணம் 9)

என்று வருணித்திருப்பது காவியச் சுவையின் உரைகல் எனக் கொள்ளலாம். ஒரு சொல்லையே இருமுறை பெய்து ஒரு தனியழகினைச் சொல்லில் புகுத்திக் காட்டல் சேக்கிழார் இயல்பு. சான்றாகத் திருவாமூர்ச் சிறப்பினைச் செய்ய வந்த சேக்கிழார் பெருமான்,



¤ நன்றி விசுவாசமுடையவன் எவனோ அவன் மாத்திரமே மனிதன் ஆவான்.

¤ சிந்திக்கும் தன்மையின் கூர்மைக்குப் பெயர்தான் பகுத்தறிவு.

¤ மானமும், அறிவுமே மனிதனுக்கு அழகு.

–தந்தை பெரியார்

## நேரு பொன்மொழிகள்



விஞ்ஞானம் மனிதனுடைய அறிவை அதிகரித்தது மட்டுமின்றி, இயற்கையில் மீதும் அவன் செலுத்தக்கூடிய ஆதிக்கத்தையும் அதிகரித்தது.

நம்மிடையே தீண்டாமையும், ஜாதியும் உள்ளவரை சமதர்மமோ, ஜனநாயகமோ தழைக்க முடியாது. நாடு முன்னேற இந்தக் கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டும்.

**உண்மையான நம்பிக்கை மட்டுமே ஒருவனுக்கு இருக்குமானால், அந்த நம்பிக்கையை வைத்தே மலைகளைக் கூட அசைத்து விடலாம்.**

'சைவநெறி ஏழுலகும் பாலிக்குந்
தன்மையினால்
தெய்வ தெறிச் சிவம்பெருக்குந்
திருவாமூர் திருவாமூர்

(திருநாவு புராணம் 12)

என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பெரிய புராணமாகிய கலைக்கோயிலின் சிறப்பினைக் கூறிக்கொண்டே போகலாம். கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார்,

'கருங்கடலைக் கைநீத்துக்
கொளவெளிது முந்நீர்
கடற்கரையி னெய்ம்மணலை
யெண்ணியள விடலாம்.
பெருங்கடன் மேல் வருந்திரையை
யொன்றிரண்டென்றே
பிரித்தெழுதிக் கடையிலக்கம்
பிரித்துவிட லாகும்;
கருங்கடலின் மீனையள
விடலாகும் வானத்

தாரகையை யளவிடலாஞ்
சங்கரன்தா டமது
சிரங் கொடிருந் தொண்டர்புரா
ணத்தையள விடநந்
சேக்கிழார்க் கெளிதல்து
தேவர்க்கும் அரிதே'

-என்றபடி சேக்கிழார் கட்டிய காவியக்கலைக் கோயிலின் மாண்பினை முற்ற உணர்த்த இயலாது.

### அரசியல் அறம்

சேக்கிழார் அமைச்சர் தொழிலைத் திறம்பட நடாத்தியவர். எனவே அரசியல் அறம் பிறழாத நெறிமுறைகளைத் தம் காப்பியத்தின் ஊடே விளக்கியிருக்கக் காணலாம். அனுபாய சோழனைக் குறிப்பிடும் பொழுது,

'மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கட்
கெலாம்
கண்ணும் ஆவியுமாம் பெருங்கா
வயான்'

(திருநகரச் சிறப்பு 14)

என்று மண்ணில் வாழும் உயிரினங்களுக்கு அரசன் கண்ணாகவும், உயிராகவும் ஒளிர்கின்றான் என்று போற்றியுள்ளார். மேலும் அரசன் கடமை குடிமகனுக்குத் தன்னாலும், தன் பரிசனத்தாலும், கள்வராலும், பகைவராலும், ஏனைய உயிர்களாலும் வரும் ஐவகைப் பயமும் வாராமற் காத்தலாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

'மாநிலங்கா வலனாவான்
மன்னுயிர்காக் குங்களிலத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன்
பரிசகனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா
லுயிர்தம்மால்
அனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா
னல்லனோ?'

(திருநகரச் சிறப்பு: 34)

இவற்றாலும் "அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான்" என்று குறிப்பிட்டிருப்பதாலும் அரசியல் அறம்பாடிய அறவோர் சேக்கிழார் என்பதனை அறியலாம்.

### சொல்லாட்சித் திறன்

சேக்கிழாரின் மொழியில் பொருட்சிறப்பு பொருந்தி இருக்கும். சுந்தரமூர்த்தி நாயனார் வரலாற்றில் இறைவன் தொண்டரோடு வாதிடுகிறார். அப்போது கிழ வடிவில் இருந்த இறைவனை நோக்கி "பழைய மன்றாடி போலும்" என நம்பி ஆரூரர் கூறும் தொடரில் மேலோட்டமாகப் பார்க்கும்போது தோன்றுதொட்டு விளங்கும் பொற்சபையின் கண்ணே நடனமாடும் கூத்தன் போலும் என்ற பொருளும்,

நீதி மன்றங்கள் பல கண்டு அங்கெல்லாம் வழக்காடிவென்று கைவந்த பழைய ஆள் போலும் என்ற சிறப்புப் பொருளும் பிறக்கின்றன.

### புகழுரை

சைவத் திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாக ஒளிரும் திருத்தொண்டர்புராணத்தை இயற்றிய சேக்கிழாரை,

'புண்ணிய முதலே பொங்கொளி
மணியே
பொய்யாப் பெருவாழ்வே
பொள்ளலில் முத்தே கள்ளமில்
வித்தே
புரையில் சுவைப்பாகே
தண்ணிய அமுதே மண்ணியல்
மதியே
தமிழ்நா வலர் ஏறே
சத்துவ நிதியே பொத்திய
பலநோய்
சாரு பெரும்பகையே
எண்ணிய அன்பர் உளத்தமு தூற
இனிக்கும் நறுந்தேனே
என்றும் பத்தி ரசம்கனி கனியே'

(சேக்கிழார் பிள்ளைத்தமிழ் செங்கீரைப்பருவம் 7)

என மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் போற்றிப் பரவுவது சாலப் பொருந்தும்.

# சூரிய வெப்ப ஆற்றல் தொழில் நுட்பம்

கே.ஏ. சுந்தரம், இ.ஆ.ப.,
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு, எரிசக்தி நிறுவனம்

சூரியனிடமிருந்து கிடைக்கும் ஆற்றல் சுத்தமானதும் அளவில்லாததும் ஆகும். அதுவும் இந்தியாவில் — குறிப்பாக தென்னிந்தியாவில் போதுமான அளவு கிடைக்கின்றது. இந்தியாவில் ஆண்டிற்கு சூரிய ஆற்றலின் அளவு சுமார் 4 மில்லியன் மெகாவாட் அல்லது 660 மில்லியன் டன் நிலக்கரிக்குச் சமமானதாகும். நமது நாட்டில் மற்ற ஆற்றல் வளங்கள் குறைவதால் சூரிய ஆற்றலின் உபயோகம் மிக முக்கியமான தாகின்றது. அது தவிர, இது பெட்ரோலிய, நிலக்கரிகளைப் போல சூழ்நிலையைப் பாதிக்காது.

## இன்றைய நிலை

சூரிய வெப்ப ஆற்றலுக்குப் பயன் படுத்துவது ஒரு முக்கியமான காரியமாகும். அநேகத் தொழில் நிறுவனங்கள் வெப்பக் காற்றை அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். வெப்ப நிலைக்கேற்றாற் போல் சூரிய ஆற்றலை முழுவதுமாகவோ அல்லது மற்ற ஆற்றலோடு கலந்து பயன்படுத்தும் தொழில் நுட்பம் இப்போது நடைமுறையில் வந்து கொண்டிருக்கிறது.

பிளண்டர்ஸ் எனர்ஜி நெட்வொர்க் பென் என்பது விஞ்ஞானிகளுக்கும் தொழில் முனைவர்களுக்கும் இடையே இயங்கும் அமைப்பாக உள்ளது. இது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ஆற்றல் துறையில் அமைந்து சூரிய வெப்ப ஆற்றல் தொழில் நுட்பத்தை ஆராய்ச்சி மூலம் நிறுவியுள்ளது. இந்தத் தொழில் நுட்பத்தைக் கொண்டு தேயிலைத் தொழிற்சாலைகளிலும் ஒரு பழப் பதப்படுத்தும் தொழிற்சாலை யிலும், சூரிய வெப்பக் காற்றுச் சாதனங் களை நிறுவியுள்ளது. அந்த நிறுவனங்களின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| இடம் | சூரிய கலெக்டரின் பரப்பளவு | அமைப்பின் நோக்கம் |
|---|---|---|
| மாஞ்சோலை தேயிலைத் தொழிற்சாலை, திருநெல்வேலி மாவட்டம். | 132 சதுரமீட்டர் | தேயிலையை உலர்த்துவதற்குக் காற்றை முன் வெப்பப் படுத்துதல். |
| குறிஞ்சி ஆர்கானிக பழங்கள் பதப்படுத்தும் தொழிற்சாலை, வத்தலக்குண்டு. | 50 சதுரமீட்டர் | பழங்களை உலர்த்துதல் |
| கோல்டன் கில்ஸ் தொழிற்சாலை, குன்னூர். | 212 சதுரமீட்டர் | |
| உபாசி முன்மாதிரிப் பண்ணை, குன்னூர். | 100 சதுரமீட்டர் | தேயிலை உலர்த்துதல் |
| ஹாவுகல் தேயிலைத் தொழிற்சாலை | 220 சதுரமீட்டர் | தேயிலை உலர்த்துதல் |
| கில்-கோத்தகிரி தேயிலைத் தொழிற்சாலை கில்-கோத்தகிரி | 250 சதுரமீட்டர் | தேயிலை உலர்த்துதல் |
| பார்க்சைடு தேயிலைத் தொழிற்சாலை, குன்னூர். | 320 சதுரமீட்டர் | தேயிலை உலர்த்துதல் |
| பாண்டியார் டான்டீ தொழிற்சாலை, கூடலூர். | 516 சதுரமீட்டர் | தேயிலை உலர்த்துதல் |
| ப்ரூக்லேண்டு தேயிலைத் தொழிற்சாலை, குன்னூர். | 290 சதுரமீட்டர் | தேயிலை உலர்த்துதல் |

மேலே கடைசியாகக் குறிப்பிட்டுள்ள இரண்டு தொழிற்சாலைகளிலும் சூரிய வெப்பக் காற்றுச் சாதனங்களை நிறுவும் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

## அரசுச் சலுகைகள்

சூரிய வெப்பக்காற்று ஆற்றல்







தொழில்நுட்பத்தை ஊக்கப்படுத்தும் நோக்கத்தோடு மத்திய, மாநில அரசுகள் பலவிதச் சலுகைகளை அறிவித்துள்ளன. அவைகளாவன:

1. முதலீட்டில் 25 சதவிகிதக் கழிவு மத்திய அரசால் தரப்படுகிறது.

2. 100 சதவிகிதத் தேய்மானம்.

3. இந்திய புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், டெல்லியிலிருந்து குறைந்த வட்டியில் 10.5 கடன் கொடுத்தல்.

4. தமிழ்நாடு அரசு சிறு தொழில்களுக்கு 10 சதவிகித முதலீட்டில் சலுகை.

சூரிய வெப்ப ஆற்றல் தொழில் நுட்பத்தை மத்திய அரசு முக்கியமாகக் கருதுவதால் மற்ற சூரிய உபகரணங்களுக்கு உள்ள சலுகைகளை நீக்கினாலும், இதற்குமட்டும் தொடர்ந்து அளிக்கின்றது.

## தொழில்நுட்பக் குறிப்புகள்

சாதாரண தொழிற்சாலைகளில் வெப்பக் காற்றை உண்டாக்குவதற்கு எண்ணெய், கரி அல்லது விறகு முதலியன பயன்படும். ஆனால், சூரிய ஆற்றலையும் இதனோடு சேர்த்துப் பயன்படுத்தினால் இந்த ஆற்றல் மூலகங்களின் அளவு குறைந்தே பயன்படும். உதாரணமாக 212 சதுரமீட்டர் அளவு







கொண்ட சூரிய வெப்பச் சாதனம் தேயிலைத் தொழிற்சாலைகளில் சுமார் 1.8 இலட்சம் ரூபாய் மதிப்பிற்குச் சேமிப்பு கொடுக்கிறது. இதனால் 1/3 பங்கு எரிபொருள் மிச்சமாகிறது.

### பொருளாதாரக் கணிப்புகள்

கடந்த 3 ஆண்டுகளாக சூரிய வெப்பச் சாதனங்களைப் பயன்படுத்தி எடுத்த ஒரு கணிப்பின்படி இதற்காக நாம் போடும் முதல் 2/3 ஆண்டிற்குள் திரும்பப் பெற முடியும். இந்தச் சாதனக் கருவிகள் 12 ஆண்டுகளுக்குக் குறையாமல் இயங்கும்.

வெப்பக் காற்றுச் சாதனங்களுக்கு உள்ள எதிர்காலம் தேயிலைத் தொழிற்சாலையில் இந்தத் தொழில் நுட்பம் நிறுவப்பட்டாலும் மற்ற தொழிற்களுக்கு இதன்பயன் இனிதான் ஆரம்பிக்கவேண்டும். இதற்குக் காரணம் செய்தி பரிமாற்றமின்மையும் வேறு சில குறைபாடுகளும் ஆகும். குறிப்பாக பழங்கள், தாளான்கள், வத்தல்கள், கடற் பொருள்கள் முதலியன பதப்படுத்துவதற்கு இதன்மூலம் நல்ல வாய்ப்புகள் உள்ளன. சுமார் 2.5 மில்லியன் சதுரமீட்டர் அளவிற்கு இந்தச் சாதனங்களை நிறுவ வாய்ப்பு இப்போது உள்ளது. தவிரவும் ஆராய்ச்சிகள் மூலம் பிளாஸ்டிக் தகடுகள் வெப்பச் சேகரிப்பு முதலியவைகளை இதனோடு சேர்த்தால் வெப்பநிலை இல்லாத நேரங்களிலும் உலர வைத்துப் பயன்பெற முடியும். அதனால் வருங்காலத்தில் இந்தத் தொழில் நுட்பத்திற்குச் சிறந்த வாய்ப்புள்ளது. பத்திரிகைகள் இந்தத் தொழில் நுட்பத்தைப் பரப்ப பெரும் தொண்டு செயயலாம்.

---

## உங்களுக்குத் தெரியுமா?

### கனிமங்கள்

★ இயற்கைச் செல்வங்களான கனிம உற்பத்தியில் நாடு முன்னேறி வருகிறது. கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் ரூ.1,924 கோடி மதிப்புள்ள கனிமங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அதற்கு முந்தைய மாதமான அக்டோபரில் ரூ.1,863 கோடிக்கு கனிம உற்பத்தி இருந்தது. இதில் நிலக்கரியின் பங்கு மட்டும் ரூ.833 கோடி.

### கதரும் கைத்தறியும்

○ கதருக்கும் கைத்தறிக்கும், எப்போதுமே மவுசுதான். உலகில் நூற்றுக்கும் அதிகமான நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அமெரிக்கா, ஐரோப்பா பொருளாதாரச் சமூகம், ஜப்பான், ஆஸ்திரேலியா நாடுகள்தான் அதிக அளவில் கைத்தறித் துணிகளை இறக்குமதி செய்கின்றன. 1993-94-இல், இவ்வாண்டு ஜனவரி வரை ரூ.1,052 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

### புதுவாழ்வு

○ மனிதக் கழிவினை அகற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ள துப்புரவுத் தொழிலாளர்களை, அத்தொழிலில் இருந்து விடுவித்து மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தினை அரசு 1991-92-லிருந்து அமலாக்கி வருகிறது. மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளிடமிருந்து கிடைத்த தகவலின்படி நடப்பாண்டில் 15,592 துப்புரவுத் தொழிலாளர்களுக்குப் பயிற்சியும், 19,189 தொழிலாளர்களுக்கு மறுவாழ்வும் அளிக்கப் பட்டுள்ளது.



# கண்கள் பாதுகாப்பு

2 முதல் 5 வயதான குழந்தைகளிடையே காணப்படும் பொதுவான நோய் கண்நோய். இது வைட்டமின்'ஏ' பற்றாக்குறையால் ஏற்படுகிறது. தொடக்கத்திலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கப்படாவிட்டால், இது குழந்தையின் பார்வையைப் பறித்து விடும்.

### *நீங்கள் மாலைக்கண் நோயைஎவ்வாறு கண்டறிய முடியும் (வைட்டமின் 'ஏ'பற்றாக்குறை)*

- ☐ முதலில், குழந்தைக்கு மாலைக்கண் நோய்ஏற்படலாம். இரவில் மற்றவர்களால் பார்க்கக் கூடியவற்றை, குழந்தையால் பார்க்கமுடியாது.
- ☐ பிறகு, கண்கள் ஈரத்தன்மையை இழந்து வறண்டு போகத் தொடங்கும். கண்களின் வெண்மைப் பகுதி ஒளி இழந்து, சுருங்க ஆரம்பிக்கும்.
- ☐ கண்களில் சிறிய சாம்பல் நிறக் கட்டிகள் ஏற்படலாம்.
- ☐ நோய் தீவிரமானதும், கருவிழிப் படலமும் வறண்டு, மங்கிப் போகும். அதில் சிறு குழிகளும் ஏற்படலாம்.
- ☐ பிறகு, கருவிழிப் படலம் விரைவிலேயே மிருதுவாகி, புடைத்துக்காணப்படும். அல்லது வெடிக்கவும் கூடும். சாதாரணமாக அப்பொழுது வலி எதுவும் இருக்காது.

தொற்று, புண் அல்லது இதர சேதத்தால் பார்வையிழப்பு நேரிடலாம்.

குழந்தை வயிற்றுப்போக்கு, கக்குவான் அல்லது எலும்புருக்கி நோயால் பாதிக்கப் பட்டிருக்கும் போது, கண்களின் நிலைமை மேலும் மோசமாகிவிடும்.

### *என்ன செய்ய வேண்டும்?*

- ☐ குழந்தைக்கு 2 வயது ஆகும் வரை தாய்ப் பால் ஊட்டவேண்டும்.
- ☐ முதல் 6 மாதங்களுக்குப் பிறகு, குழந்தைக்கு வைட்டமின்'ஏ' செறிந்த குழந்தை உணவு வகைகளை, அதாவது பச்சைக் கீரைகள், மஞ்சள் அல்லது சிவப்புப் பழங்கள் மற்றும் காய்கறிகள் போன்றவற்றைக் கொடுக்கவும். பால், முட்டைகள், ஈரல் மற்றும் இறைச்சி ஆகியவற்றிலும் வைட்டமின் 'ஏ' நிறைந் துள்ளது.
- ☐ குழந்தைக்குப் பின்வருமாறு வைட்டமின் 'ஏ' ஊட்டச்சத்தை வழங்க ஆரம்பச் சுகாதார மையம், துணை மையத்திற்குக் குழந்தையை எடுத்துச் செல்லவும்.

| மருந்தளவு | வயது | |
|---|---|---|
| 1வது மருந்தளவு | *9 மாதங்கள்* (தட்டம்மை தடுப்பு மருந்துடன் | *1,00,000 ஐயூ* |
| 2வது மருந்தளவு | *16-18* மாதங்களுக்கு இடையில் (டிபிடி/ போலியோ பூஸ்டர் மருந்துடன்) | *2,00,000 ஐயூ* |
| 3வது முதல் 5வது மருந்தளவுகள் | *3முதல் 5* வயதுக்கு இடையில் (ஒவ்வொரு ஆறுமாதக்கால இடைவெளிக்குப் பின்னரும்) | *2,00,000 ஐயூ* |





அமர்ந்தே நிகழ்ச்சிகளைப் பார்க்கவேண்டும்.

**உங்கள் கண்களை விபத்துக்களிலிருந்து காப்பீர்!**

- ☐ குழந்தைகள் அம்பு, கில்லி மற்றும் கற்களுடன் விளையாடுவதைத் தவிர்க்க வேண்டும்.
- ☐ குழந்தைகள் பட்டாசுகளுடன் விளையாடுவதை அல்லது அவற்றை வெடிப்பதைத் தவிர்க்கவேண்டும்.
- ☐ குழந்தைகள் கூரிய பொருட்களான கத்தி, கத்தரிக்கோல், பேனா, பென்சில், போன்றவற்றைக் கையாளும்போது கவனமாக இருக்க வேண்டும்.

குழந்தைக்குப் பார்வை மங்கி இருந்தாலோ, கண் இமைகள் சிவந்து, வீங்கி இருந்தாலோ, அல்லது படிக்கும்போது குழந்தை கண்களைக் கசக்கினாலோ, அல்லது நிறங் களை அறிவதில் குழந்தை சிரமப் பட்டாலோ, உடனடியாகக் குழந்தையை மருத்துவமனை அல்லது ஆரம்பச் சுகாதார மையம் / துணை மையத்திற்கு நிபுணரின் ஆலோசனை மற்றும் சிகிச்சையைப் பெறுவதற்காகக் கொண்டு செல்ல வேண்டும்.

**கண்களை நல்லமுறையில் காப்பதற்கான சிறந்த பழக்கங்கள்**

- ☐ குழந்தைகள் தினமும் குறைந்தது மூன்று முறை கண்களைக் கழுவ வேண்டும்.
- ☐ போதிய ஒளியின் கீழ் குழந்தைகள் படிக்க வேண்டும்.
- ☐ குழந்தைகள் தொலைக்காட்சியிலிருந்து குறைந்தது மூன்று மீட்டர்கள் தள்ளி

# எண்ணிக்கைக் கூடுமா?

## செப்டம்பர் 27 . உலகச் சுற்றுலா தினம்

'தரம்' அனைத்துத் துறைகளின் தாரக மந்திரமாகத் திகழ்கிறது. தரம் கூடினால், தேவையும் தானாகவே அதிகரிக்கும். இது சுற்றுலாத் துறைக்கும் பொருந்தும்.

சுற்றுலாப் பயணியரை ஈர்க்கும் இடங்களும், அம்சங்களும், இதர வசதிகளும் இருந்தால் மட்டும் போதாது. புன்னகை தவழும் முகத்துடன், பணிவான, சுமுகமான, விரைவான சேவையே பெரிதும் அவசியம்.

இதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நோக்கில், உலகச் சுற்றுலா தினமான செப்டம்பர் 27 -ந் தேதி, "தரமான பணியாளர்கள், தரமான சுற்றுலா" என்ற கருத்துக் குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். தரமான பணியாளர்களை உருவாக்க முறையான கல்வியும், பயிற்சியும் தேவை என்பதும் உணரப்பட்டுள்ளது.

தென்னிந்தியா ஒரு முக்கியச் சுற்றுலா இடமாக நிலைபெற்றுள்ளது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் வரையிலான காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டு ஆகஸ்ட் வரையில் தென்னிந்தியாவிற்கு வந்துள்ள சுற்றுலாப் பயணிரின் எண்ணிக்கை 27 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.

தென்னிந்தியாவில் தற்போது நட்சத்திரத் தகுதி பெற்ற 1200 விடுதி அறைகள் உள்ளன. நட்சத்திரத் தகுதி உள்ள 215 விடுதிகள் உருவாகி வருகின்றன.

உலகச் சுற்றுலா தினத்தை ஒட்டி, மத்திய அரசின் சுற்றுலாத்துறை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி வாரியம் மற்றும் சுற்றுலாத் தொழில்துறை இணைந்த நான்கு நாள் கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்துள்ளன. கலாச்சார நிகழ்ச்சிகள், சுற்றுலா ஓட்டம், வினாடி வினாப் போட்டி ஆகியவை நடைபெறும்.

சேவையின் தரம் கூடினால், சுற்றுலாப் பயணியரின் எண்ணிக்கையும் கூடும்!

# சுற்றுப்புறச் சூழல் காத்திடுவோம்!

ஆசியக் கண்டத்திலேயே இந்தியா மக்கள்தொகை வளர்ச்சியில் 2-வது இடத்தை வகிக்கிறது. இந்தியாவின் நிலம் உலகப் பரப்பளவில் 2.4 சதவிகிதமாக உள்ளது. இந்தியாவின் மக்கள்தொகை உலக மக்கள்தொகையில் 15.4 சதவிகிதமாக உள்ளது. இந்தியாவில் ஆண்டுதோறும் 2.48 சதவிகித மக்கள்தொகை உற்பத்தி பெருகி வருகிறது. இந்தியாவின் வருமானம் உலக வருமானத்தில் 1.5 சதவிகிதம். இந்தியாவில் 1/2 நொடிக்கு ஒரு குழந்தை பிறப்பதாகக் கணக்கிட்டுள்ளார்கள். ஆனால் சாவு எண்ணிக்கையோ 1.4 சதவிகிதமாக உள்ளது.

உலகம் பஞ்ச பூதங்களால் ஆனது. பஞ்சபூதங்களும் சுத்தமாக இருந்தால்தான் உலகத்தில் உயிர்கள் உயிர்வாழ முடியும். குறிப்பாக நமது இந்தியா 3,20,88,250 சதுர கி.மீ. நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. இதில் மக்கள்தொகை 95 கோடியைத் தாண்டியுள்ளது. இந்நிலையில் 0.14 எக்டேர் நிலம் ஒரு ஆளுக்கு என்று உள்ளது. நாளுக்கு நாள் மக்கள்தொகை கூடிக்கொண்டிருக்கிறது. நாளுக்குநாள் வாகனங்களும் தொழிற்சாலைகளும், பெருகிவருகின்றன. அதுவல்லாமல் பிறப்புகள் அதிகம், இறப்பு குறைவு.

நவீன மருந்து கண்டுபிடிப்பும், விஞ்ஞான முன்னேற்றமும் தான் இதற்குக் காரணம். ஆதிகாலத்தில் நவீன மருந்து, மருத்துவ நிலையங்கள் இல்லாததால் 'காலரா', 'பிளேக்', 'அம்மை' போன்ற கொடிய நோய்களால் மனித இனம் அழிந்து வந்தது. இருநாட்டாரிடையே போர் மூள்வதால் மக்கள் அழிந்து வந்தனர். மேலும் இயற்கையின் மாறுபாடுகளைக் கண்டறியும் நுட்பத்திறன், அவற்றை மக்களுக்கு அறிவிக்கும் திறமை இல்லாத காரணத்தால் புயல், வறட்சி, பஞ்சம் போன்றவைகளால் மக்கள் அழிந்து வந்தனர். ஆனால் தற்சமயம் எவ்வித நோய் வந்தாலும் தடுத்து நிறுத்த மருந்துகள் ஏராளம் உள்ளதாலும், இன்ன தேதியில் இன்ன திசையில் புயல் சூறாவளிக்காற்று வீசி சேதம் ஏற்படுத்த உள்ளது என முன்னதாகத் தெரிவித்து அதனால் பாதுகாப்பான இடங்களைச் சென்றடைவதற்கான கண்டுபிடிப்புக் கருவிகளும், அடையாளக் கருவிகளும் அறிவிக்கும் கருவிகளும், கண்டுபிடிக்கப்பட்டு நடைமுறையிலிருப்பதாலும், மக்கள் தொகை குறைய வழியில்லை.

நாளுக்குநாள் வாகனங்கள் பெருகியும் தொழிற்சாலைகள் வளர்ந்தும் வருவதால் அவைகள் வெளியிடும் அசுத்தக் காற்று, மக்கள் வெளியிடும் அசுத்தக்காற்று ஆகாயத்தில் கலந்து சூடுதலாகி, பிராணவாயு குறைவாகி சுற்றுப்புறச் சூழல் கெடுவதால் உயிர்வாழ் இனங்கள் விரைவில் அழியவுள்ளன. இவைகளை விஞ்ஞான ரீதியில் சுத்தப்படுத்த வேண்டுமென்றால் எத்தனைக் கோடிப் பணம் செலவிடப்பட வேண்டும் என்று எளிதில் கணக்கிட முடியாது.

குறுகிய செலவில் பஞ்சபூதங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ள நம்மிடம் வழியுண்டு. அதுதான் வளம் பெருக்கும் வழி. மரங்கள் நடப்படவேண்டும். நட்ட மரங்களையும் இருக்கும் மரங்களையும் வெட்டாமல் பாதுகாக்க வேண்டும் என்கிற விழிப்புணர்ச்சி நம்மிடம் ஏற்படவேண்டும். செடி, கொடி மரம் இவைகள் நட்டு வளம் பெருக்குவதால் நிலம், நீர், காற்று, ஆகாயம் நன்கு தூய்மை பெறுகின்றன.



மரங்களை நடுவதால்-

1. மரங்களின் இலைகளும் கிளைகளும் நமக்கு நிழலைத் தருகின்றன.

2. மரத்தின் அடியில் உள்ள வெப்பநிலை பக்கத்தில் மைதானத்தில் உள்ள வெப்பநிலையைவிடக் குறைவாக உள்ளது.

3. மரத்தின் கீழ் மண்ணின் ஈரம் காக்கப்படுகிறது.

4. மரத்தின் வேர்கள் அதிகத் தண்ணீரைத் தன்னுள்ளே சேமிக்கிறது. அதனால் நிலத்தடி நீர் பெருகுகிறது.

5. ஆலைகள், தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்களால் சுற்றுப்புறத்தில் கலந்துவிடும் நச்சுப் பொருட்களை உட்கொண்டு சுற்றுப்புறச் சூழ்நிலையைத் தூய்மை ஆக்குகிறது.

6. விஷ வாயுவான கரியமில வாயுவை உட்கொண்டு பிராண வாயுவை வெளிப்படுத்துகிறது.

7. ஒரு எக்டேர் நிலத்தில் உள்ள மரங்கள் சுமார் 3 டன் கரியமில வாயுவை உட்கொண்டு 2 டன் பிராண வாயுவை வெளியிடுகிறது.

8. ஒரு எக்டேர் பரப்பளவில் உள்ள காடுகள் சுமார் 20 முதல் 30 டன் துகளைத் தேக்கி வைத்துக் கொள்கிறது.

எனவே நிலத்தைத் தூய்மையடையச் செய்வதும், மரங்களே காற்றைச் சுத்தப்படுத்தி நல்ல காற்றை வழங்குவதும் மரங்களே. நீரில் இருக்கும் அசுத்தங்களை உண்டு நீரைச் சுத்தப்படுத்துவதும் தாவரங்களே எனபதை நீங்கள் உணரவேண்டும்.

ஆகாரம் இல்லாமல் சிலகாலம் வாழலாம். நீர் இல்லாமலும் சில காலம் வாழலாம். ஆனால் காற்று இல்லாமல் யாராலும் உயிர் வாழ முடியாது. பஞ்ச பூதங்களிலே மிக முக்கியமானது காற்றுத்தான். காற்றுத்தான் சுத்தமாக இருக்க வேண்டும். காற்றில் பிராணவாயு, கரியமிலவாயு, ஹைட்ரஜன் வாயு போன்றவைகள் உள்ளன. சுத்தமான பிராணவாயுவும் ஹைட்ரஜன் வாயுவும் சேர்ந்துதான் நீர் உண்டாகிறது. இந்நீர் உறைந்தால் அது திடப்பொருளாகிறது. ஆகையால் மூலப்பொருள் காற்றிலிருந்து திரவம் கிடைக்கிறது. பின் அதிலிருந்து திடப்பொருள் கிடைக்கிறது. (காற்று-திரவம்-திடப் பொருள்) ஆகையால் சுற்றுப்புறச் சூழல் தூய்மை பெற அதிக மரங்கள்- தாவரங்கள் நட்டு காற்றையும், நீரையும், நிலத்தையும் தூய்மையடையச் செய்வதால் உலகில் உயிரினம் நோய் நொடியின்றி வாழமுடியும்.

இதனை நன்குணர்ந்த அறிஞர்கள் உலகத்தில் உயிரினம் நோய் நொடியின்றி வாழ சுற்றுப்புறச் சூழ்நிலை எப்போதும் தூய்மையுடன் இருக்க வேண்டும் என்று மக்களுக்கு உணர்த்த மரம் நடுவிழா, மற்றும் வன விலங்கு வார விழா, உலக வன நாள் விழா மற்றும் உலகச் சுற்றுப்புறச்சூழல் தின விழா எனப் பல விழாக்கள் மூலம் மக்களுக்கு மரத்தின் மகிமையை நினைவூட்டி, விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி மரம் நடுவதன் அவசியம், பாதுகாப்பதன் முக்கியத்துவம் உணர்த்தி எதிர்காலச் சந்ததியினர்களுக்கு நன்மை பயக்கப் பெருவாரியான மரங்கள் நடவும் மரங்களை வெட்டாமல் பாதுகாக்கவும் எப்போதும் மக்களிடையே ஞாபகப்படுத்திக் கொண்டிருக்க உலகச் சுற்றுப்புறச் சூழல் தினவிழா ஆண்டுதோறும் ஜூன் மாதம் வந்து கொண்டிருக்கிறது. இதைச் சிறப்புறக் கொண்டாடுவதில் யாரும் அலட்சியம் காட்டுதல் நன்றல்ல.

-டி. பாண்டியன்
ஆராய்ச்சி அலுவலர்
'ஈகோ டெவலப்மெண்ட்
அலுவலர்,
அம்பாசமுத்திரம்.

# குண்டடிபட்ட காவலருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி!

தென்னார்காடு வள்ளலார் மாவட்டத்தைச் சேர்ந்த காவலர்கள் கடந்த 21.12.1992 அன்று கடலூர் வட்டத்திலுள்ள, ராமாபுரம் கிராமத்தில் துப்பாக்கி சுடும் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும்போது, திரு.சண்முகம் என்ற காவலருக்கு தற்செயலாகக் குண்டடிப் பட்டது. குண்டடிப்பட்ட காவலர் திரு. சண்முகம், தனது மருத்துவச் செலவிற்காக நிதி உதவிக் கோரி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் கருணை மனு ஒன்றினை அனுப்பி வைத்திருந்தார்.

காவலர் திரு. சண்முகத்தின் கோரிக்கை மனுவினைக் கனிவோடு பரிசீலனை செய்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், அவருக்கு மருத்துவச் சிகிச்சைக்கு நிவாரண உதவித் தொகையாக ரூ. 5,000/ 'முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ' வழங்க ஆணை பிறப்பித்துள்ளார்.



# கணியான் கூத்து

–டாக்டர் அ.கா. பெருமாள்
அறிஞர் அண்ணா கல்லூரி
ஆரல்வாய்மொழி

தமிழகத்தின் தென்மாவட்டங்களான சிதம்பரனார், நெல்லை கட்டபொம்மன், குமரி மாவட்டங்களில் நாட்டார் தெய்வங்களுக்கு எடுக்கப்படும் 'கொடை' விழாக்களில் சடங்கியலாக நிகழ்த்தப்படும் கலை வடிவமே கணியான் கூத்தாகும். 'கணியான் ஆட்டம்', 'மகுடாட்டம்' எனும் பெயர்களும் இக்கலையைக் குறிப்பனவே.

'கணியான்' என்ற சாதியைச் சார்ந்தவர்களாலேயே இக்கலை நிகழ்த்தப்படுகிறது. வில்லுப் பாட்டைப் போன்றே இதிலும் கதைப் பாடலையே நிகழ்த்துகின்றனர்.

மேற்குறிப்பிட்ட மூன்று மாவட்டங்களில் நாட்டார் தெய்வக் கோயில்களில் வழிபாட்டு முறைகளுள் ஒன்றாகவே கணியான் கூத்து வழக்கிலுள்ளது. சுடுகாட்டிலுள்ள சுடலைமாடச் சுவாமி வழிபாட்டில் கணியானாட்டம் இல்லையென்றால், கொடை விழாவே நடைபெறாது.

கணியான் சாதியினர் தங்களைத் தெய்வக் கணியான் என்றே அழைக்கின்றனர். இச்சாதியின் தோற்றத்தைப் பற்றிய கதை இக்கலையோடு தொடர்புடையது என்பது குறிப்பிடத்தக்கது.

உலகத்தை ஆளுவதற்காக, தட்சன் செய்த யாகத்திலிருந்து கிடைத்த அதுர்பதத்தைத் தனக்குக் கொடுக்காததால் கோபமுற்ற சிவபெருமான், தட்சனின் கூட்டத்தை அழித்தார். தட்சன் சிவனை அடிபணிந்து மீண்டும் தவம் செய்ய அனுமதி கேட்க, சிவன் சுடலை மாடனையும் பிரம்மராக்குச் சக்தியையும் உற்பத்தி செய்யின் அனுமதி தருவதாகக் கூறினார். யாகம் நடந்தது. யாகத்திலிருந்து முதலில் பிரம்மராக்கு தோன்றினாள். அவளைத் தொடர்ந்து சுடலை மாடன் தோன்றி "எனக்குப் பெரிய பூசை போட்டால்தான் வருவேன்" என்றதால், அவர்களும் ஒத்துக் கொண்டனர். உடனே மாடன்,

"மகுடச் சத்தம் கேட்டால் ஒழிய
மாடன் பூசை கொள்வானோ
நாக்கு வெட்டினைக் கண்டால் ஒழிய
நானே பூசை கொள்வேனோ
பேய்க்கு முகத்தைக் கண்டால் ஒழிய
பெருகப் பூசை கொள்வேனோ
பெரிய கணியான் வந்தால் ஒழிய
பூசை கொள்ளுமோ மாடனும்"

என்று கணியானை உற்பத்தி செய்து தனக்குப் பூசை செய்யக் கூறினான். தட்சனும் தேவர்களும் கணியானை எவ்வாறு தோன்றச் செய்வது எனக் கேட்க, சிவன் தெய்வப் பெண்கள் ஏழுபேரும் இந்திராணி தலைமையில் தம் முன் ஆடவேண்டும் என்று கூறினார். சிவன் முன் அவர்கள் ஆடினர். இந்திராணியின் சிலம்பு தெறித்து, ஒரு மணியிலிருந்து கணியான் மகுடத்தோடு தோன்றினான். சிவன் அவனிடம் சுடலை மாடசாமி விழாக் கொள்ளுமாறு ஆடவேண்டும் என்று கூற, அவனும் அவ்வாறு செய்தான். இந்தக் கணியானின் வழிவந்தவர்களாகையால் கணியான் சாதியினர் தங்களைத் தெய்வக் கணியான் என்று அழைக்கின்றனர்.

கணியான் கூத்து நிகழ்த்துபோது பெரும்பாலும் ஆறு கலைஞர்கள் பங்கேற்பர். தலைமைப்பாடகர் ஒருவரும், உதவிப் பாடகர் ஒருவரும், மகுடக்காரர்கள் இருவரும், பெண் வேடதாரிகள் இருவரும் ஒன்று சேரக் கூத்தினை நிகழ்த்துவர்.

கணியான் கூத்தினை நடத்திச் செல்பவர் தலைமைப் பாடகரே. இவரை 'அண்ணாவி' என்று அழைப்பர். கூத்து நிகழ்த்தும்போது தலைமைப்பாடகர் நின்றுகொண்டு தான் பாடவேண்டும். தெய்வத்தின் எதிரே அரங்கின் ஓரத்தில் நின்று கொண்டு அவர் பாடுவார். தலைமைப்பாடகருக்கும் தெய்வப் படிமத்திற்கும் உள்ள இடைவெளி பெரிதாக இருக்கும். கூத்தின்போது அவர் பார்வையாளர்களாலும், கோவில் நிர்வாகிகளாலும் பெரிதும் மதிக்கப்படுவார். ஒற்றைக்காதை கரத்தால் பொத்திக்கொண்டு மறு கையை நீட்டி இசைக்குத் தகுந்தவாறு அசைத்துக் கொண்டு அவர் பாடலைப் பாடுவார். கதையை நீட்டுவதற்காக அவர் வசனங்களையும் சொல்வதுண்டு.

தலைமைப்பாடகர் பாடுவதை உதவிப்பாடகர் இழுத்துப் பாடுவார். கணியான் கூத்துப் பயிற்சி பெறுபவர்கள் இவ்வாறு உதவிப்பாடகராக இருப்பதுண்டு.

மகுடம் கணியான் கூத்தில் மிக முக்கியமான இசைக் கருவியாகும். மகுடத்தை வைத்து இக்கூத்தினை மகுடாட்டம் என்று அழைக்கின்றனர். பூவரசு, வேப்பமரம் ஆகியவற்றின் கட்டைகளைப் பயன்படுத்தி மகுடத்தின் வட்டமான சட்டகத்தினைச் செய்வர். மகுடத்தில் எருமை மாட்டுக்கன்றுக் குட்டியின் தோல் பயன்படுத்தப்படுகிறது. ஒரு கூத்துக்கு இரண்டுவகையான மகுடங்கள் பயன்படுத்தப்படும். ஒன்றை 'மந்தம்' என்றும், மற்றொன்றை 'உச்சம்' என்றும் அழைப்பர். மந்தமும், உச்சமும் சேர்ந்து இசைக்கும் பொழுது கூத்து உச்ச நிலையை அடையும். தலைமைப்பாடகருக்கு வலப்புறம் உச்சத்தை இசைப்பவரும், இடப்புறம் மந்தத்தை இசைப்பவரும் நிற்பர். மகுடங்களை இசைப்பவர்களும் நின்றுகொண்டேதான் இசைக்கவேண்டும்.

தலைமைப்பாடகரின் பாட்டுக்குத்

தகுந்தவாறே மகுடக்காரர்கள் தாளம் அடிப்பர். மகுடத்தின் ஒலி தவுலின் ஒலியைவிட அதிகமாக இருக்கும். மகுடத்தை அடித்துக் கொண்டே தலைமைப்பாடகர் பாடும் பாடல் வரிகளை எடுத்துப் பாடுவார்.

கணியான் கூத்து நிகழ்வில் இரண்டு பேர் பெண் வேடம் தரித்து ஆடுவர். 25 ஆண்டுகளுக்கு முன்பு வரை கணியான், ஆட்டக்காரர் களுக்குத் தேவையான சேலை, சம்பர் போன்றவைகளைப் புரத வண்ணார் (தாழ்த்தப்பட்டவர் களுக்கு மட்டுமே வெளுக்கும் வண்ணான்) மாத்தாக்க் கொடுக்க வேண்டும் என்னும் நியதி இருந்தது. இப்போது ஆட்டக்காரர்கள் தங் களுக்குரிய ஆடைகளை வாங்கி வைத்துக் கொள்ளுகின்றனர். ஆட்டக்காரர்கள் தலை முடியை வட்டமாகச் சுற்றி வட்டுக்கொண்டை போட்டிருப்பர். பெண் வேடத்தில் அவர்கள் ஆடுவதால் பெரும்பாலும் நீளமாய் முடி வளர்த்துக் கொண் டிருப்பர். காலில் சப்தமாக ஒலிக்கும் சலங்கைகளைக் கட்டியிருப்பர்.

சிறு தெய்வக் கோவில்களில் கோவிலுக்கு முன் பகுதியில் கணி யான் கூத்து நடைபெறும். கோவி லின் முன் பகுதியில் இருபுறமும் பார்வையாளர்கள் அமர்ந்திருப்பர். விழாக்காலங்களில் கோவிலின் முற் பகுதியில் ஓலைப் பந்தல் போடுவர். ஆட்டக்காரர்கள் ஆடுவதற்கு வசதியாக நீள் வட்ட அமைப்பில் ஆடுகளம் அமைந்திருக்கும். தலை மைப்பாடகர், பின்பாட்டுக் காரர்கள். மகுடக்காரர்கள் ஆகி யோர் அரை வட்ட வடிவமாகவும் பெண் வேடதாரிகள் இயங்கும் விதம் அரை வட்ட வடிவமாகவும் அமைந்திருக்கும்.

நாட்டார் வழக்காற்றியலின் ஆட்டப் பாடல்களில், ஆட்டத்திற்கு ஏற்றபடி இசைக்கருவிகளின் ஓசை தொடக்கம் முதல் முடிவு வரை அமைந்து ஆட்ட அசைவுகளை நிகழ்த்தும் வண்ணம் இடம் பெறு வது தாள நடை என்று கூறப் படுகிறது. மகுடாட்ட இசைக்கும், பெண் வேடதாரிகளின் ஆட்டத் திற்கும் பெரும்பாலும் ஒற்றுமை காணப்படுகிறது. ஆனால், சில இடங்களில் ஆட்டத்திற்கும், தாளத் திற்கும் சம்பந்தம் இல்லாமல் போவதுமுண்டு.

கணியான் கூத்துக் கலைஞர்கள் மரபு வழிக் கலைஞர்கள் ஆவர். இவர்கள் இசைபயில்வதற்குத் தனி ஆசிரியரிடம் செல்வதில்லை. சிறு வயது முதல் பெரியவர்களுடன் இணைந்து கச்சேரிக்குச் செல்லும் போது தானாகவே பழகிக் கொள் ளும் வாய்ப்பைப் பெறுவர். கதை களைத் தலைமைப்பாடகர் நிகழ்த் தும்போதே அதனைக் கேட்டுத் தெரிந்து கொள்வர். எனவே பாட்டுக்கட்டும் வாய்ப்பாடுகளும் (Formula) அடிக்கருத்துக்களும்



(Theme) அவர்களுக்குப் பழக்கத்தில் வந்துவிடுகின்றன. சிறு வயதிலேயே தலைமைப்பாடகருடன் செல்லும் அனுபவம் தான் அவர்களின் பயிற்சி. ஆட்டக்காரர்களுக்கும், மகுடக் காரர்களுக்கும், துணைப்பாடகர் களுக்கும் தலைமைப்பாடகர் பாடும் கதைகள் எல்லாம் தெரியும்.

தலைமைப்பாடகர் பாடும் வரி களைத் துணைப்பாடகரும், மகுடம் அடிப்பவர்களும் எடுத்துப்பாடுவர். தலைமைப்பாடகரின் இசைக்கு ஏற்றமுறையில் மெதுவாக அடிக்கப் படும் மகுடம் குழுவாகப் பாடும் போது உச்ச நிலையில் அடிக்கப் படும். அப்போது பெண்வேட தாரிகள் ஆடுகளத்தில் மிக வேக மாகச் சுற்றிசுற்றி ஆடிவருவர். கதை வசன நடையில் விளக்கப்படும் போதுகூ மகுடம் மந்த ஒலியில் இசைக்கப்படும். மகுடம் அடிப்ப வர்கள் அதை முறையாகப் படிக் கின்றனர். அதற்கும் குறிப்பிட்ட குரு யாருமில்லை. தந்தையிடமோ, வேறு உறவினர்களிடமோ முறையாகப் பழகுகின்றனர்.

கணியான் கூத்து இசையும் ஆட்டமும், கலந்த கலை என்றாலும் தெருக்கூத்திலும் ஒயிலாட்டத்திலும், கழியல் ஆட்டத்திலும் அடவு களுக்குக் கொடுக்கப்படும் முக்கியத் துவம் கணியான் ஆட்டத்தில் இல்லை. முறையாகப் பயிற்சி பெற்று கணியான் கூத்தில் ஆட்டம் நிகழ்த்தப்படுவதில்லை. மகுடத்தின் ஓசைக்கும், பெண்வேடதாரிகளின் காலில் கட்டப்பட்ட சலங்கை ஒலிக்கும் இணைவு இருக்குமே தவிர அடவுகளுக்கும், இசைக்கும் இணைவு இருப்பதில்லை. கணியான் கூத்தில் இடையிடையே நகைச் சுவைத் துணுக்குகள் இடம்பெறு வதுண்டு. கோவிலில் சடங்குகள் நடைபெறாதபோது பார்வையாளர் களிடையே சலிப்பு ஏற்படாமல் இருப்பதற்காக நகைச்சுவையைப் பயன்படுத்துகின்றனர்.

பார்வையாளர்களில் தூங்கியவர் களைப் பெண்வேடதாரிகள் எழுப்பி விடுதல், கேலி செய்தல் போன்றவை கூத்தின்போது இடம்பெறும்.

கணியான் கூத்து, சடங்கியலானது என்பதால் கோவிலின் தலைமைத் தெய்வத்தின் கதை பாடப்படும் பொழுது பார்வையாளர்கள் பெரும் பாலும் கதையை மிக உன்னிப்பாகக் கேட்பார்கள். சாமி ஆட்டம் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட வர்க்கு வரவில்லை என்றால் கணியான் பாட்டு பாடினால் சாமி வரும் என்று நம்புகின்றனர். கோவி லின் முக்கிய தெய்வத்திற்குரிய சாமியாடியும், ஆட்டக்காரர்களு டன் சேர்ந்து ஆடுவதுண்டு.

சுடலை மாடன் கோவிலில் கொடையின்போது 'கணியான் கைவெட்டு' நடைபெறும். கணியான் ஆட்டத்தின் நிகழ்த்துதல் பற்றி இக்கட்டுரை குறிப்பிட்டதால் கணியான் கல்வெட்டு இவ்விடத்தில் குறிப்பிடப்படவில்லை.

(நன்றி: 'இளைஞர் கலை விழா மலர்' - மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் - திருநெல்வேலி)

## 1993-ஆம் ஆண்டு சிறுசேமிப்பு சிறந்த சொற்றொடர் போட்டியில் பங்கு பெற்று பரிசு பெற்ற தமிழ்ச் சொற்றொடர்கள் கீழே தரப்படுகின்றன.

1. வறுமையை அகற்றுவது சேமிப்பு
   பெருமையைக் கொடுப்பது சேமிப்பு
2. வரவுக்கேற்ற சிறு சேமிப்பு
   வாழ்வுக்கேற்ற பாதுகாப்பு
3. தன்மானத்தைக் காக்க
   வருமானத்தில் சேமிப்பீர்
4. சிக்கனம் உயர்வுக்கு கைகொடுக்கும்
   சேமிப்பு வாழ்வுக்கு உயிர் கொடுக்கும்
5. வாழ்வில் வரும் பல சோதனை
   சேமிப்பு கொண்டு படைப்போம் சாதனை
6. சிதறுவதால் நமக்குள்ளே தாழ்வு
   சேமிப்பதால் சிறப்பாகும் வாழ்வு
7. சிக்கனம் இல்லத்தின் சொத்தாகும்
   சேமிப்பு இன்பத்தின் வித்தாகும்.
8. சிக்கனம் காப்பவர் வாழ்வின் மேதை
   சேமிப்பொன்றே செழிப்பின் பாதை
9. கொஞ்சம் கொஞ்சமாய்ச் சேமி
   கொஞ்சி வாழ்த்தும் இந்த பூமி
   நாளைக்குச் சேமிக்கலாம் என்பது மடமை
   நாளும் சேர்ப்பது உன் கடமை
10. மூத்தோர் சொல்லை மறக்க வேண்டா
    முதல் தேதி சேமிப்பை நிறுத்த வேண்டா.
11. நாட்டுக்குப் பாதுகாப்பு இராணுவம்
    வீட்டுக்குப் பாதுகாப்பு சேமிப்பு
12. ஊதாரிச் செலவுகள் தாழ்வினைக் கொடுக்கும்
    ஊக்கமுள்ள சேமிப்பு வாழ்வினைக் கொடுக்கும்
13. உரம் வயலுக்கு வளம் தரும்
    சேமிப்பு வாழ்வுக்கு நலந்தரும்
14. ராகமும் தாளமும் இசைக்கு விழியாகும்
    சேமிப்பும் சிக்கனமும் வாழ்வுக்கு வழியாகும்
15. செலவினைச் சுருக்கிடுவோம்
    சேமிப்பைப் பெருக்கிடுவோம்

# நூல் நயம்

### இக்கால இலக்கியப் படைப்பாளர்கள்- சிறுகுறிப்புகள்

தொகுப்பாசிரியர்: பி.வி. கிரி

வெளியீடு : கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
பூங்காநகர்,
சென்னை 3

பக்கம்.152 விலை ரூ.55

'தமிழ் எழுத்தாளர் யார்? எவர்?" என்னும் தலைப்பில் பல தொகுப்பு நூல்கள் வெளிவந்துள் ளன. அந்த வரிசையில் இந்த நூல், இக்கால இலக்கியப் படைப்பாளர் களைக் குறித்த விவரங்களைச் சற்று விரிவாகவே கூறுகின்றது. ஏறக்குறைய 480 எழுத்தாளர் களைப் பற்றிய தகவல்களை, அவர்களது முழு முகவரியுடன் தரப்பட்டுள்ளது. அத்துடன் மாவட்ட வாரியாக, எழுத்தாளர் களைப் பற்றிய குறிப்புகளைக் கொடுத்திருப்பது, இந்நூலின் சிறப்பம்சமாகும்.

தமிழகம் தவிர புதுவை, ஆந்திரம், கேரளம், கர்நாடகம், மகாராஷ்டிரம், கல்கத்தா, புது டெல்லி ஆகிய மாநிலங்கள் மற்றும் மலேசிய எழுத்தாளர்கள் குறித்தும் விவரங்கள் தரப்பட்டுள்ளன.

எழுத்தாளர்கள் குறித்து எழுத் தாளர்களே அறிந்து கொள்ளவும், பொதுவாக எல்லோரும் அவர் களைப் பற்றித் தெரிந்து கொள் ளவும், இந்த நூல் மிகவும் பயன் படும். வெளியிட்ட கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தாரைப் பாராட்ட வேண்டும்.

-மறைமலை

### நீதி நூல்கள்

உரையாசிரியர்:
திரை
தண்டபாணி

வெளியீடு: உமா பதிப்பகம்,
58, ஐயப்ப
செட்டித் தெரு
சென்னை 600 001

விலை: ரூ 15 பக்: 216

பள்ளிக் கல்வி என்கிறபோது, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், உலகநீதி, வெற்றிவேற்கை, வாக் குண்டாம், நல்வழி, நன்னெறி இவை இன்றி இல்லையென்பது நாம் அறிந்ததே.

வாழ்க்கை நெறி முறைகளை.க் கூறி, மனிதன் மனிதனாக வாழ வழிகோலும் நீதி நூல்கள் இவை. இந்நூல்களை அழகுறத் தொகுத்து, இனிய எளிய உரையுடன் பகுத்துத் தந்துள்ளார் உரையாசிரியர். இல் லந்தோறும் இருக்க வேண்டிய இனிய நூல்.

–பி.வி.ஜி.

### எம்.ஜி.ஆர். நினைவுகள் (நிழற்படத் தொகுப்பு)

தொகுப்பாசிரியர்:
அருள்மொழி பதிப்பகம்
12 பி.1, ஆற்காடு சாலை,
சந்தோஷிமாதா
கோயில் எதிரில்,
விருகம்பாக்கம்,
சென்னை 600 092

பக்கம்: 124

படங்கள்:319 விலை ரூ 30/

ஆரவாரமான சொல்லடுக்கு இல்லை, ஆடம்பரமான வார்த் தைக்கட்டிடங்கள் இல்லை, அலங் காரமான வர்ணனைகளோ, அளவுக்கு மீறிய பிரசங்கமோ கிடையாது. இருந்தாலும் கண் ணுக்கு விருந்தளித்து கருத்துக்குச் செறிவூட்டும் வகையில் படைக்கப் பட்டிருக்கின்றது 'எம்.ஜி.ஆர். நினைவுகள்' என்னும் நிழற்படத் தொகுப்பு நூல்.

மக்கள் திலகம் என்று மதிக்கப் பட்டவர்; புரட்சிநடிகர் எனப் புகழப்பட்டவர்; புரட்சித் தலைவர் என்று போற்றப்பட்டவர்; இதய தெய்வம் என்று ஏற்றப்பட்டவர்; பாரத ரத்னா என்று பாராட்டப் பட்டவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர் நடித்த படங்களிலிருந்து நாம் பார்த்த காட்சிகள் மட்டு மல்ல; பார்க்கமுடியாத - அதாவது படம் பிடிக்கப்பட்டு திரைப் படத்திலே இடம் பெறாத காட்சிகளும் இப்புத்தகத்திலே இடம் பெற்றிருப்பதும் திரைப் படக் காட்சிகள் மட்டுமல்லாது, அவர் பங்குபெற்ற படவிழா, நிகழ்ச்சி என்று செய்திப்படங்கள் வெகுவாக இடம் பெற்றிருப்பதும் இந்நூலின் தனிச் சிறப்பாக உள்ளது.

வெறும் படங்களுடன் நிறுத்தி விடாமல், எம்.ஜி.ஆரைப் பார்த்துப் பிரமித்தவர்கள், பழகிப் புரிந்த வர்கள் .எனப் பலரது கட்டுரை களும் இடையிடையே வழங்கப் பட்டுள்ளன.

பார்க்கின்ற பக்கமெல்லாம் படங்களாய் நிறைந்திருக்கும் இந்நூல் பார்த்து ரசிக்க மட்டு மல்ல; படித்து மகிழ மட்டுமல்ல; பத்திரப்படுத்தி வைக்க வேண்டிய நூலும் கூட!

### சின்ன நதிக்கள்

ஆசிரியர்: கவிஞர் பல்லவன்

வெளியீடு: குமணன் பதிப்பகம்
தமிழ்க்குரல்
76, திருவள்ளுவர் நகர்,
திருக்கழுக்குன்றம்
603 109

பக்கங்கள்: 84 விலை: ரூ.15/

முதல் வரிக்கு முற்றிலும் மாறுபட்ட திருப்பத்தை மூன்றாம் வரியில் கொடுத்து முடிக்கப்படும் ஜப்பானிய ஐக்கூ வடிவில் தமிழில் எழுதப்பட்ட கவிதைகள். கவின் மிகு காட்சியைக் காட்டி படிப் போரை அர்த்தங்கள் தேட வைக்கும் தலைப்புச் செய்தி வடிவான மடக்கு வரிகள்; பல வரிகள் மிடுக்கு. படித்து மகிழலாம்.

–சாரதி

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி
HTA 7556 95

Licence No.TN/MS(C)/PP-23








